
HELLO MOBILE WORLD
122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050



அறைவு 03 இயம் 15 November 08 - 14, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 16 விலை : 30.00



STUDIO ABISHA

Professional Video & Photo Graphers
SA

NO.259 Central Roat, Trincomalee.
0262226842/0772302658/0776617791
abishadigital@gmail.com




நியாயமான கோரிக்கை

-ஹசன் அலி-



துண்டாட முடியாது

-ரி.எம்.ஜெயரத்ன-



கேட்பது ஈழம் அல்ல

-றஜாப்டீன்-



பாரதூரமான பிரச்சினை

-விஜயதாச-



இணங்கக் கூடாது

-முஸம்மில்-



கடுமையாக நிராகரிப்பு

-நிஷாந்த-

# கிழக்கில் முஸ்லிம் தனி மாவட்டம்

கிழக்கு மாகாணத்தில் தனியானதொரு முஸ்லிம் மாவட்டத்தைப் பிரகடனப்படுத்தும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முயற்சியை அடுத்து இலங்கையின் பல்வேறு அரசியல் கட்சிகளும் தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ்ஸின் கோரிக்கையை வன்மையாகக் கண்டிப்பதாக விமல் வீரவன்சவைத் தலைவராகக் கொண்ட தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஸ்ஸாமில் தெரிவித்திருப்பதுடன் இக் கோரிக்கையானது தமிழ்த் தேசியக் 13

## அமைதி காக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## படுகாடு மக்களின் காணி மீள் பங்கீடு !!!

## தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு

ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட அனுமதிப்பத் திங்களைக் கொண்டதும், பயிர்ச்செய்கைவரியைப் பல்லாண்டு காலமாக செலுத்தப்பட்டுள்ளதுமான தமிழர்களின் காணிகளை மீள் பங்கீடு செய்வது தொடர்பாக பேசப்பட்டபோது மக்கள் தமது கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த 30ம் திகதி மூதூர் மற்றும் சேருவிலைப் பிரதேசச் செயலாளர்களின் தலைமையில் நடைபெற்ற 13



கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆதாரமற்ற குற்றச்சாட்டு

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

மலைமுரசில் வெளியிடப் பட்டமைக்கு விசனம்

கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. அத்துடன் அக்குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கி கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர்

வீதித் தொழிலாளிகள் அலுவலகத்தில் பணி???

## கிழக்கில் நியமனங்களில் குளறுபடி

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் அண்மையில் வழங்கப்பட்ட சுகாதார மற்றும் வீதித் தொழிலாளர்களின் நியமனத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாக சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக வீதிகளில் வேலை செய்து வரும் தொழிலாளிகளுக்கு வழங்க வேண்டிய நியமனங்களை அலுவலகத்தில் பணி புரிபவர்களுக்கு 13

## இளம் தாயின் சாவில் சந்தேகம்!!!
## பெற்றோர் காவல்துறையில் மனு

தூக்கில் தொங்கி மரணமான இளம் தாயொருவரின் சாவில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து குடும்பத்தினர் காவல்துறை அத்தியட்சகரிடம் மனுவொன்றைக் கொடுத்துள்ளனர்.

திருகோணமலை லிங்கநகர் பிரதேசத்தில் கடந்த வாரம் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட இளம் தாயான திருமதி. பிரியதாசன் கஜேந்தினி அவர்களின் சாவிலேயே சந்தேகம் நிலவுவதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர். 13





Sugirtha Stationers

காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336
அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 026 2227677

## கிழக்கில் ஓர் தனி மாவட்டம்

கிழக்கில் ஓர் தனி மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும் என கிழக்கு வாழ் முஸ்லிம்கள் உட்பட அவர்களின் கட்சிகளில் ஒன்றான முஸ்லிம் காங்கிரஸ்சும் விரும்புகின்றது போலத் தெரிகின்றது.

அவ்விருப்பம் ஏன் எழுந்தது என்பதையோ அதற்கான மிகச் சரியான காரணங்கள் எவையென்பதையோ நிரூபிப்பதற்குப் பொதுவான அடிப்படைகள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் அவ்விருப்பம் வெளிப்பட்டவுடன் ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் குரல் கொடுத்துள்ள போதிலும் எதிராகப் பல்வேறு கட்சிகள் குரலெழுப்பியுள்ளன.

உண்மையிலேயே இனம் சார்ந்த மாவட்டம் ஒன்று உருவாக்கப்படுமாயின் அதனைத் தொடர்ந்து பல மாவட்டங்கள் தமக்கான உரிமையொன்றாக அதனைக் கருத இடமுண்டு என்ற வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

ஒரு மாவட்டம் தான் கொண்டுள்ள பெரும்பான்மையினத்தின் பெயரால் அது அழைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையொன்றை இம்முயற்சி உருவாக்கிவிடும் போல இருக்கின்றது என பலர் கருதுகின்றனர். அதனடிப்படையில் மாவட்டங்கள் இனரீதியாகப் பிரிந்து அவ்வாறு பிரிந்த மாவட்டங்கள் ஒன்றிணைந்து செயற்பட முயற்சிக்குமாயின் அவை ஒரு நாட்டுக்குள் இருக்கும் பல்வேறுபட்ட கூறுகள் என்ற நிலையையும் அடைந்துவிடும். அதாவது கிட்டத்தட்ட பிரிவினையொன்றின் பண்புகளைக் கொண்டிருக்கும் என்பதே அங்கு விரவி நிற்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புவியியல் ரீதியாக தனி முஸ்லிம் மாவட்டமாகக் கோரப்படுகின்ற அப்பிரதேசத்தின் குடிப்பரம்பல் நிலை கவனத்திற்கொள்ளத் தக்கது எனத் தெரிவித்துள்ளவர்கள் அப்பரம்பல் நிலையைச் சிதைக்கும் செயற்பாடுகள் தொடர்வதனாலேயே அப்பிரதேசத்தைத் தனி முஸ்லிம் மாவட்டமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதாகத் தெரிகின்றது.

இக்கோரிக்கை தொடர்பாக வெளிப்படையாக அனைத்துக் கட்சிகளும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ள போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் எவ்வித கருத்துக்களையும் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தாமலுள்ளது.

இவ்வாறு உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தாமல் மௌனம் சாதிப்பதானது தமிழர்களின் அரசியல் நகர்வுக்கு முக்கியமானதாக இருப்பது போலவே தெரிகின்றது.

ஆராய்ந்தால், இக் கோரிக்கையை எதிர்த்தால் கிழக்கு மாகாண சபையில் ஆட்சிக் கட்டைப் பிடிக்கும் முயற்சியில் தமிழர்களுக்கு முஸ்லிம்களின் ஆதரவு இல்லாமற் போய்விடலாம் என்பது காரணமாக இருக்கலாம். அத்துடன் இந்தியப் பிரதமரைச் சந்தித்த போது தமிழர்கள் ஒரே குரலில் செயற்பட வேண்டும் என கேட்டுக் கொண்டதை திருப்திப்படுத்த முடியாது போய்விடலாம். மாறாக ஆதரித்தால் பின்னொருநாளில் இவ்விடயம் ஒரு தலையிடியாக தமிழத் தேசியக் கூட்டமைப்பிற்கு உருவாகி விடுமோ என்ற எண்ணம் உருவாகியிருக்கலாம்.

அதனால் மௌனமாயிருப்பது சாலச்சிறந்தது என்ற சிந்தனை தற்போதைக்குச் சரியானதாகப் பட்டாலும், மௌனம் நீண்டகாலத்தில் எந்தப் பயனையும் தராது பாதாளத்தில் தள்ளும் என்பதை தெரிந்துகொள்ளுவோமா?

## சிறுமிக்குக் கையில் சூடு

திருகோணமலை, லிங்கநகர் பகுதியில் சிறுமிக்கு இரும்புக் கம்பியால் சூடுவைத்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் சிறிய தாயாரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக காவல்தறை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

10 ரூபா பணத்தை திருப்பிக்கொடுக்காதமைக்காக சிறுமிக்கு சூடு வைக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தினால் காயமடைந்த சிறுமி தற்போது திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், கைதான பெண்ணை நீதவானுக்கு முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பள்ளிவாயல் உடைந்து நபர் பலி



திருகோணமலை கணேஸ் லேனில் அமைந்துள்ள நூராணியா ஜும் ஆ மஸ்ஜித் பள்ளியில் கூரையில் திருத்த வேலைகளை மேற்கொளும் போது கட்டட சுவர் இடிந்து விழுந்ததில் கட்டட இடிபாடுகளில் நால்வர் சிக்குண்டனர்.

இடிபாடுகளில் சிக்கியவர்கள் திருகோணமலை தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனிலையில் இன்று அதிகாலை அப்பகுதியைச்சேர்ந்த 27 வயதுடைய ஜே.நவாஸ் என்பவர் உயிரிழந்துள்ளார்

(நிக்கி தொம்சன்)

## மதர் ஸ்ரீலங்காவின் 5000 புத்தகங்களைச் சேர்த்து அன்பளிக்கும் முயற்சி

மதர் ஸ்ரீலங்கா நிறுவனமும் திருகோணமலை மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரியும் இணைந்து 5000 புத்தகங்களைச் சேர்த்து நூலகங்கள் இல்லாத பாடசாலைகில் நூலகங்களை உருவாக்குவதற்கு முன்வந்துள்ளது.

கல்வி உயர்கல்வி அமைச்சின் ஊடாக, பாடசாலைக் கழக நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "நாம் நாட்டிற்காக நாட்டின் மேம்பாட்டிற்காக" நூலகமற்ற கிராமப் புறப் பாடசாலைகளுக்கும் நூலகத்தைக் கொண்டு செல்வோம் வாரீர்! என்ற தொனிப் பொருளுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆர்வலர்கள் எதிர்வரும் 10.11.2014ற்கு முன்பதாகப் புத்தகங்களை தலைவர், மதர் ஸ்ரீலங்கா, மெதடிஸ்த மகளிர் கல்லூரி, கடற்படைத்தள வீதி, திருகோணமலையில் (தொலைபேசி இல: 0262222437).

## கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் துணிந்து குரலெழுப்ப வேண்டும்

கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் பெருந்தோட்ட மக்களின் துயர் துடைக்கத் துணிந்து குரலெழுப்ப வேண்டும் என நகரசபை உறுப்பினர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியரால் ஏமாற்றி அழைத்து வரப்பட்ட மலையக மக்கள் இலங்கையை ஆட்சி செய்த பேரினவாத அரசுகளால் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அளப்பரிய தியாகங்களைச் செய்து இந்நாட்டை வளப்படுத்திய போதும் பல நூறு ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவர்களது வாழ்வு பின்தங்கிய நிலையில் இருப்பதையே மீரியபொத்த மணிசரிவு காட்டியிருப்பதாகத் தெரிவித்த அவர் மலையக மக்கள் கல்வி, காணி, வீட்டுரிமை போன்றவற்றில் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்த கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்று திரண்டு குரலெழுப்ப வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

## சவூதி விசா நடைமுறை மாற்றம்

தொழில்வாய்ப்புக்காக பணியாளர்களுக்கு வீசா வழங்கும் முறையில் திருத்தம் மேற்கொள்வதற்கு சவுதி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தொழில்வாய்ப்பிற்கு பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கு தொழில் வழங்குனர்களின் செலவை குறைத்துக்கொள்வதும், பணியாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதும் இந்த நடவடிக்கைக்கான காரணமென அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கமைய, பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கு ஒன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் முறைமை அந்நாட்டு தொழிற்துறை அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைமையின் ஊடாக பணியாளர் ஒருவரை அமர்த்துவதற்கு சவுதி குடும்பமொன்று செலவிடும் 20 ஆயிரம் ரியால்கள், இரண்டாயிரம் ரியால்களாக குறையுமென தெரிவிக்கப்படுகின்றது.

## சங்கமித்தைக்கு அருகில் கடற்கரைப் பூங்கா

நகர அபிவிருத்தி அதிகார சபையின் திருகாணமலை அலுவலகத்தினால் கடற்கரை பூங்கா ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

கோணேசர் ஆலய வீதியில் உயர்ந்தபாடு கடற்கரைப்பகுதியில் அமைக்கப்படவுள்ள இப் பூங்காவிற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நகர அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர் நா.இராஜநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே அடிக்கல்லினை நட்டு வைத்தார். (கதிரவன்)



## பட்டித்திடல் முகாமில் இந்து அறநெறிப் பாடசாலை

பட்டித்திடல் இடைத்தங்கல் முகாமில் இந்து அறநெறிப் பாடசாலையொன்றைத் தாபிக்கும் முயற்சி கைகூடியுள்ளது.

இடைத்தங்கல் முகாம்களில் வாழிவியலைச் சிறுபராயம்முதல் கற்பிக்க வேண்டும் என்ற தெளிவான சிந்தனையுடன் மூதூர் இந்துக் குருமார் சங்கமும் மலைமுரசும் மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தில் முதலாவது பாடசாலை கிளிவெட்டியில் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து இரண்டாவது பாடசாலை பட்டித்திடலில் நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப் படவுள்ளது.

கொட்டியாபுரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியத்தின் பங்களிப்புடன் கிழக்கு மாகாண இந்து மாமன்றத்தின் ஒத்தாசையுடனும், மூதூர் இந்துக் குருமார் சங்கத்தின் இடையறாத முயற்சியினால் ஆரம்பமாகவுள்ள இப்பாடசாலையின் தொடக்க விழாவில் மேற்கூறப்பட்ட அமைப்புக்களின் தலைவர்கள், செயலாளர்கள் உட்படப் பலர் கலந்துகொள்வர் எனத் தெரிகின்றது.

## அனர்த்தத்திற்கு இரங்கல்

பதுளையில் நடைபெற்ற அனர்த்தத்தை அடுத்து அங்கு மரணமான மக்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலை மூதூர் இந்துக் குருமார் சங்கம் வெளியிட்டுள்ளது. அத்துடன் இவ்வனர்த்தத்தின் போது கோவிலுடன் சேர்ந்து புதையுண்டு போன பூசகரது இழப்பும் வேதனையைத் தருவதாகத் தெரிவித்துள்ள சங்கம் அனைவரது ஆன்மாவும் சாந்தியடையப் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday Times

### அமைச்சருடைய சந்தேகத்திற்கிடமான கொள்கலன்கள் விடுவிப்பு




ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட இரண்டு கொள்கலன்களில் ஒன்றில் மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ள வேளையிலும் அதனைச் சுங்கத் திணைக்களம் பரீட்சிப்புக்கு உட்படுத்தாமல் விடுவித்துள்ளது.

அமைச்சரவை அங்கீகாரம் கொண்ட அமைச்சர் ஒருவரின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் அறக்கட்டளையொன்றால் இறக்குமதி செய்யப்பட்ட 40 மற்றும் 20 அடி நீளமான இரண்டு கொள்கலன்களிலும் பாவிக்கப்பட்ட 200 மிதிவண்டிகள் இருப்பதாகவே வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் 200 சைக்கிள்களைக் கொண்டு வருவதற்கு 20 அடி நீளமான கொள்கலனொன்று போதுமாயிருக்கும் போது இரண்டாவது 40 அடி நீளக் கொள்கலனும் அதற்காகப் பாவிக்கப்பட்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியதை அடுத்தே சுங்கத் தடுப்புப் பிரிவினரால் அவை தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

எனினும் விசாரணைகள் எவையும் முன்னெடுக்கப்படாமல் ரூபா 436,571 இறக்குமதி வரியாகச் செலுத்தப்பட்டு கொள்கலன்கள் இரண்டும் விடுவிக்கப்பட்டுள்ளன.

### பிரித்தானியாவில் 3000 இலங்கையர் காணாமற் போயுள்ளனர்



கண்டுபிடிக்க முடியாமற் போயுள்ள சுமார் 50,000 சட்ட விரோதக் குடியேற்றவாசிகளில் 3000 பேர் இலங்கையர் என பிரித்தானியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதாவதையும் நாடுகடத்தப்படுவதையும் தவிர்ப்பதற்காகவே இவர்கள் மறைந்துறைகின்றனர் என எல்லை முகவர் நிலையம் அறிவித்துள்ளது.

### 178 பில்லியன் சொத்துக்கள் கைப்பற்றப்படும் – வரி ஆணையாளர்


ශ්‍රී ලංකා දේශීය ආදායම
இலங்கை உள்நாட்டு இறைவரி
SRI LANKA INLAND REVENUE

வரி நிலுவைகளைச் செலுத்தாமல் ஏய்த்து வருபவர்களின் சொத்துக்களைக் கைப்பற்றப் போவதாக வரி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சுமார் 178 பில்லியன் ரூபாச் சொத்துக்கள் இவ்வாறு கைப்பற்றப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

2006ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டத்திற்கு அமைவாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் வரி செலுத்தாமல் ஏய்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தமது இலக்குகளை அடைய முடியாமல் இருப்பதாகவும் வரி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

### "இலங்கைக் கொடியுடன் இயங்கும் வள்ளங்களே எமக்குப் பிரச்சனை"



நெடுநாட் கடற் பயணத்தை மேற்கொள்ளும் றோலர்கள் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது தடைகளை ஏற்படுத்தியமைக்குக் காரணம் இலங்கைக் கொடியுடன் இயங்கும் வெளிநாட்டு வள்ளங்களே என இலங்கை மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பதிவு செய்து விட்டு இலங்கைக் கொடியுடன் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட சீன நாட்டு படகுகளுக்கு மீன்பிடி அமைச்சு அனுமதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## Sunday Observer

### பாரிசவாதத் தாக்குதல் இலங்கையிலேயே அதிகம்!!!

பாரிசவாதத்தாக்குதலுக்கு உள்ளாகும் நோயாளிகளின் எண்ணிக்கை உலகிலேயே இலங்கையில் தான் அதிகம் எனத் தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு இந்த எண்ணிக்கையானது எதிர்காலத்தில் அச்சமூட்டும் வகையில் அதிகரிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் ஒரு வீதமானது தற்போது பாரிசவாதத் தாக்குதலுக்கு இலக்காகி வருவதாகத் தெரிவித்த தேசிய பாரிசவாதச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் உ. ரணவக்க பாரிசவாதம் தொடர்பாக மக்களின் விழிப்புணர்வு மூலமே இதனைத் தடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

### சனாதிபதியே வெல்லுவார் –போர்ப்ஸ் சஞ்சிகை–



எதிர்வரும் தேர்தலிலும் சனாதிபதியே வெல்லுவார் என சர்வதேசச் சஞ்சிகையான போர்ப்ஸ் தெரிவித்துள்ளது.

மூன்றாவது தடவையும் போட்டியிட இருக்கின்ற தடைகள் யாவற்றையும் நீக்கி அவர் வெல்லுவார் எனத் தெரிவித்துள்ள இந்தச் சஞ்சிகை அண்மைய தேர்தல்களில் இடப்பட்ட வாக்குகளின் வீதத்தைக் குறித்துக் கொண்டால் 40 வீதத்திற்கும் குறைவான வாக்குகளையே ஏனைய கட்சிகள் அனைத்தும் சேர்ந்து பெற்றுக்கொண்டுள்ளன எனத் தனது கணிப்பில் இச்சஞ்சிகை தெரிவித்துள்ளது.

### சட்ட விரோத குடியேறிகளின் தொகை அதிகரிப்பு

இலங்கையில் சட்டவிரோதமாகக் குடியேறு-பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாக குடிவரவு குடியகல்வுத் துறை தெரிவித்துள்ளது.

கடந்த 2010ம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை 1,144 வெளிநாட்டவர் இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகள் போல வருகைதந்து பின்னர் சட்டவிரோதமாக வதிவிட அனுமதியைக் கோரியுள்ளனர்.


### முன்னாள் போராளிகளில் ஒருவர் வைத்தியர்



புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் போராளிகளில் ஒருவர் மருத்துவராக பயிற்சி செய்து வருவதாகவும் மற்றொருவர் விரிவுரையாளராகப் பணியாற்று -பவராகவும் அண்மையில் கூட்டமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக இலங்கையில் அனைத்துச் சமூகங்களிற்கும் சம வாய்ப்பு வழங்கப்படுவதாக அங்கு கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாதாரண தரப்பரீட்சை 9 முதல் 18 வரை



சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் மாதம் 09ம் திகதி தொடக்கம் 18ம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு ஐநூற்று எண்பதாயிரத்து எண்பத்தி நாலு பேர் தோற்றவுள்ளனர்.

பரீட்சையில் குளறுபடிகளை மேற்கொள்பவர்களின் பரீட்சை முடிவுகள் தடுத்துவைக்கப்படுவதுடன் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளது என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## The Leader

### யாரை நோவது?



ஹல்துமுள்ள மலைப் பிரதேசத்தில் நடைபெற்ற மண்சரிவை அடுத்து அவ்வாறு மண்சரிவு ஏற்படும் எனத் தெரிந்தும் அதனைத் தடுக்க முடியாமல் போனதற்கு அப்பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதேசச் செயலாளர் மற்றும் மஸ்கேலிய பிளாண்டேசன் நிறுவனம் ஆகியவற்றின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மண்சரிவு தொடர்பான அபாய அறிவிப்பானது உடனடியாக பிரதேசச் செயலாளருக்கும், மஸ்கேலிய பிளாண்டேசன் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

### த.தே.கூ விடம் இருந்து முறையான அறிவிப்பு இல்லை

மீண்டும் நிபந்தனைகளுடன் பேச்சுமேடைக்குத் திரும்புவது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ள வேளையிலும் உத்தியோகபூர்வ அறிவித்தல் எதனையும் த.தே.கூ தமக்குத் தெரியப்படுத்தவில்லை என அரசு தெரிவித்துள்ளது.

முறைப்படியாக த.தே.கூ தமது நிபந்தனைகளை அரசிற்குத் தெரியப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா பேச்சுக்குத் திரும்ப வேண்டுமாயின் முன்நிபந்தனைகளோ அல்லது வேறு அனுமதிகளோ த.தே.கூ விற்குத் தேவையில்லை எனத் தெரிவித்தார்.

### உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லை – அரசு




மீண்டும் நிபந்தனைகளுடன் பேச்சுமேடைக்குத் திரும்புவது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ள வேளையிலும் உத்தியோகபூர்வ அறிவித்தல் எதனையும் த.தே.கூ தமக்குத் தெரியப்படுத்தவில்லை என அரசு தெரிவித்துள்ளது.

முறைப்படியாக த.தே.கூ தமது நிபந்தனைகளை அரசிற்குத் தெரியப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா பேச்சுக்குத் திரும்ப வேண்டுமாயின் முன்நிபந்தனைகளோ அல்லது வேறு அனுமதிகளோ த.தே.கூ விற்குத் தேவையில்லை எனத் தெரிவித்தார்.

## Ceylon Today

### விமானியை வெருட்டிய லைக்கா மொபைல் குழு

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் பயணம் செய்த லைக்கா மொபைல் குழுமத்தில் பணியாற்றும் 28 பேர் மேற்கொண்ட குழவினர் விமானப் பறப்பு தாமதமாகியதைத் தொடர்ந்து மேற்கொண்ட வேண்டத்தகாத நடவடிக்கைகளால் பிரதம விமானி தலையஜட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இக்குழுவில் மூவர் பாதுகாப்பு நடைமுறைகளை மீறியதுடன் அவர்கள் போதைக்கடிமையாகவும் இருந்துள்ளனர்.

### கொஸ்லாந்தைக்குச் சர்வதேச உதவி தேவையில்லை

சர்வதேசத்தின் உதவி கொஸ்லாந்தைக்குத் தேவையில்லை என சனாதிபதி கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

உதவியைக் காரணம் காட்டி நாட்டுக்குள் நுழையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நாட்டுக்கு ஆபத்து என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உடனடி உதவியாக 50000 அமெரிக்க டொலர்களை உதவ முன்வந்ததுடன் அதன் சர்வதேச அபிவிருத்தி முகவரமைப்பான யுஎஸ்எய்ட் நிறுவனம் அங்க தொழிற்படும் என்றும் கூறியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை வீழ்த்தும் முயற்சியும் கூட்டுப்பொறுப்பின் முக்கியமும்

அரசியல் ஆய்வு

செல்வரட்ணம் சிறிதரன்




ஒரு வருட நிறைவைக் கண்டுள்ள வடமாகாண சபையின் செயற்பாடுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. இந்த விமர்சனங்கள் அரசியல் ரீதியாக அரசாங்கத் தரப்பில் இருந்தும், அரச ஆதரவாளர்கள் பக்கத்தில் இருந்தும், சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடமிருந்தும் வந்திருப்பது வியப்புக்குரியதல்ல. அதேநேரம் இந்த விமர்சனங்கள் சபையில் உள்ள ஆளும் கட்சி உறுப்பினர்களிடமிருந்து அதிருப்தி உணர்வோடு, பல்வேறு ஆதங்கங்களை வெளிப்படுத்தும் வகையில் வெடித்திருப்பது சீரிய சிந்தனைக்குரிய விடயமாகும்.

வட மாகாண சபை பொறுப்பேற்றதில் இருந்து கடந்த ஒரு வருட காலத்தில் 168 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பட்டியலிட்டிருக்கின்றார். இந்தப் பிரேரணைகளில் எத்தனை வீதமானவை நிறைவேற்றப் பட்டிருக்கின்றன, அவற்றின் ஊடாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள பயன்கள் என்ன என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பெரும் எண்ணிக்கையில் பிரேரணைகளை நிறைவேற்றி யிருப்பதனால் தான் எதிர்க்கட்சியினர் வடமாகாண சபையை பிரேரணை சபை என்று வர்ணித்திருக்கின்றார்கள்.

வடமாகாண சபையின் செயற்பாடுகளுக்கு அரசாங்கத்தினால் முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன என்பது புதுவிடயமல்ல. இதனை அநேகமாக அனைவரும் அறிவார்கள். தமிழ்த்தேசிய கூட்டமைப்பை எந்தவகையிலும் கணக்கில் எடுக்காத எடுக்க விரும்பாத ஒரு போக்கிலேயே அரசாங்கம் அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

அரசியல் ரீதியாகத் த.தே.கூட்டமைப்பை எந்த அளவுக்குத் தோற்கடிக்க முடியுமோ அந்த அளவுக்கு, அந்த அளவு உச்ச நிலையில் அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தி, தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்புக்கு இருக்கின்ற அரசியல் செல்வாக்கை வீழ்த்திவிட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து அரசாங்கத் தரப்பினர் செயற்பட்டு வருகின்றார்கள்.

வடமாகாணத்தில் மாகாண சபையும், அரசாங்கமும் தத்தமது அரசியல் அதிகார எல்லைக்குள் நின்று மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டும். இது அரசியல் ரீதியானது. அது மட்டுமல்ல. இரு தரப்பினருக்கும் குறித்து ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்து வதற்கான வாய்ப்பாகும். அத்துடன், அந்த அதிகாரங்களை உச்ச பயனளிக்கும் வகையில் மக்களுக்கு நன்மையளிக்கத் தக்கதாகப் பயன்படுத்தி, மக்கள் மத்தியில் நற்பெயரையும், அரசியல் ரீதியான ஆதரவையும் திரட்டிக் கொள்வதற்குரிய சந்தர்ப்பமாகவும் கூட கருதலாம்.

சுருக்கமாகச் சொல்வதானால், அரசியலமைப்பு ரீதியாக அரசாங்கமும், மாகாண மட்டத்தில் மாகாண சபையும் மக்களுக்குரிய சேவைகளை ஆற்றுவதற்கு அரசியலமைப்பு ரீதியாக அதிகாரங்கள் வகுத்து ஒதுக்கப் பட்டிருக்கின்றன. இந்த அதிகாரங்களை இரு தரப்பினரும் தங்களுக்குள் முரண்படாத வகையில் முட்டி மோதிக் கொள்ளாத வகையில் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்பதே அரசியலமைப்பு ரீதியான நோக்கமாகும்.

எனவே, இரு தரப்பினரும் எங்கெங்கு தனியாகச் செயற்பட வேண்டுமோ அங்கெல்லாம் தத்தமக்குரிய அதிகார வட்டத்திற்குள் இருந்து தனியாகவும், அதே நேரத்தில் எங்கெங்கு இணைந்து செயலாற்ற வேண்டுமோ அங்கெல்லாம் விட்டுக் கொடுப்புடனும் ஒருவரை யொருவர் அங்கீகரித்தும் செயலாற்ற வேண்டியதும் அவசியமாகும். ஆனால் இத்தகைய போக்கை வடமாகாண சபையின் செயற்பாடுகளில் காண முடியவில்லை.

### முரண்பாடான செயற்பாடுகள்

அரசாங்கமானது, தனக்குரிய அதிகாரங்களை எந்தெந்த வகையில் நேரடியாக, மக்கள் மத்தியில் பயன்படுத்த முடியுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் ஏதேச்சதிகாரத்துடன் செயற்பட்டு வருவதையே காண முடிகின்றது. அண்மையில் வடமாகாணத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ஜனாதிபதியின் விஜயமானது, அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டைப் பளிச்சென வெளிச்சம் போட்டு காட்டியிருந்தது. ஜனாதிபதி நாட்டின் தலைவர் என்ற ரீதியில் வடமாகாண சபையினரையும் உள்வாங்கிச் செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக அவருடைய விஜயமும், செயற்பாடுகளும் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டிருந்ததாகவே அமைந்திருந்தன.

அரசாங்கத் தரப்பினரும்சரி, எதிரணியில் உள்ள மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பில் உள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் சரி, அடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே என்பதை மறந்துவிடலாகாது. அரசியல் காரணங்களையும், கட்சி ரீதியான தனிப்பட்ட அரசியல் ஆளுமை என்ற ரீதியிலான நோக்கங்களையும் முன்வைத்து தங்களுடைய அதிகார பலத்தையோ அரசியல் செல்வாக்கையோ காட்ட முற்படுவது நல்லதல்ல.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், தலைவர்கள் என்ற ரீதியில் பொது விடயங்களில் மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற விடயங்களில் அரசியல் வேறுபாடுகளைப் புறந்தள்ளி இணைந்து செயற்பட வேண்டியது அவசிய மாகும். தனது வடபகுதிக்கான விஜயத்தின்போது, ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வளர்ச்சிப் பணிகள் தொடர்பான மீளாய்வு கூட்டத்தில் உரையாற்று கையில் அக் கூட்டத்தைக் கூட்டமைப்பினர் புறக்கணிக்கும் வகையில் அங்கு சமுகமளிக்காதிருந்ததைச் சுட்டிக்காட்டி, மக்களுக்கு சேவையாற்றும்போது, அவர்களுக்கான வேலைத்திட்டங்கள் பற்றி பரிசீலிக்கும்போது மக்களுடைய பிரதிநிதிகள் என்ற வகையில் அரசியல், இன, மத பேதங்கள் பாராமல் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், அரச தரப்பினர் அவர் கலந்து கொண்டிருந்த அந்தக் கூட்டத்தை, ஜனாதிபதி வலியுறுத்தியிருந்த கோட்பாடுகளுக்கு அமைவாக ஒழுங்கு செய்திருக்கவில்லை. மிகுந்த விட்டுக் கொடுப்புடன் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்குத் தாங்கள் தயாராக இருக்கின்ற போதிலும், அரசாங்கம் அவ்வாறு இணைந்து செயற்படுவதற்குத் தயாராக இல்லை என்பதை ஜனாதிபதியின் வடபகுதிக்கான விஜயத்தில் தாங்கள் கலந்து கொள்ளாதிருந்தமை குறித்து விளக்கமளித்திருந்த வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஒரு நாட்டின் தலைவர் என்ற ரீதியில் தான் கலந்து கொண்டிருந்த கூட்டத்தைக் கூட்டமைப்பினர் புறக்கணித் திருந்தமை குறித்து, ஜனாதிபதி தமது வருத்தத்தை வெளிப்படுத்தும் தொனியில் கருத்துக்களை வெளிப்படுத்தி யிருந்தார். ஆனால், அரசாங்கத்திற்கும் வடமாகாண சபையின் நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளியைக் கருத்தியல் ரீதியான வேற்றுமையைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவரோ அல்லது அவரைச் சார்ந்தவர்களோ முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

மாறாக மக்கள் மத்தியில் அவர்களுக்குள்ள அரசியல் செல்வாக்கை இல்லாமல் செய்வதற்கான குறுக்கு வழி நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டிரு ப்பதையே காண முடிகின்றது. இத்தகைய போக்கில் அரசியல் ரீதியான மாற்றம் ஏற்பட வேண்டும். இல்லையேல் இத்தகைய முரண்பட்ட போக்கானது எதிர்காலத்தில் விபரீதமான விளைவுகளுக்கு வழியேற் படுத்தியதாக அமைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. வடமாகாண சபையின் உள்ளக முரண்பாடுகள் வடமாகாண சபையானது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான ஓர் அரசியல் கட்டமைப்பாகும்.

சுயநிர்ணய அடிப்படையிலான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் உரிமைகளுக் காகவே, தமிழ் மக்கள் போராடி வருகின்றார்கள். அந்த வகையில் வடமாகாண சபையின் அதிகாரங்களோ, அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்போ, அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யாத ஓர் அமைப்பாகவே காணப்படுகின்றது. எனினும் எதுவுமே இல்லாத நிலையில் இதனை ஓர் ஆரம்பப் புள்ளியாக இருப்பதை வைத்துக் கொண்டு தேவையானதைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற் கொள்ள முடியும் என்ற நோக்கில், வடமாகாண சபைக்கான தேர்தலில் கூட்டமைப்பினர் களமிறங்கியிருந்தனர்.

அதேநேரம் தமிழ் மக்களுடைய பிரதேசத்தில் பெயரளவிலான அதிகாரங்களைக் கொண்ட ஓர் அமைப்பாக இருந்தாலும், அதனை எதிரணியினரின் கைகளுக்குச் செல்லவிடாமல் காத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கமும் அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

கூட்டமைப்பினருடைய இந்த நோக்கங்கள் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்ததன் காரணமாக்வே மூன்றிலிரண்டு பங்குக்கும் அதிகமான பெரும்பான்மை பலத்தைத் தேர்தலில் மக்கள் அவர்களுக்கு வழங்கி யிருந்தார்கள். மறுபக்கத்தில் தேசிய அரசியல் நீரோட்டத்தில், தமிழ் மக்கள் வன்முறை அரசியல் போக்கைக் கொண்டவர்கள் என்ற தோற்றப்பாட்டை காட்டுவதற்காக பேரினவாதிகள் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளை முறியடிப்பதற்காக, புத்தம் புதிய வரவாக முதலமைச்சருக்கான வேட்பாளராக சிவில் துறையில் நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்றிருந்த நீதியரசராகிய விக்கினேஸ்வரனை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் களமிறக்கியிருந்தார்.

அவருடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றத்தக்க வகையில் மக்கள், அவருக்கு அமோகமாக வாக்களித்து அதிகூடிய பெரும்பான்மை வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்திருந்தார்கள். ஆனால் முதலமைச்சர் என்ற ரீதியில் அவருடைய தலைமையில் வடமாகாண சபையின் செயற்பாடுகள் எதிர்பார்த்த வகையில் வெற்றியளிக்க வில்லை. வடக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமையைக் கொண்ட மாகாண சபை என்பது, பொதுமக்களுக்கும் அதேபோன்று அதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் புதியதோர் கட்டமைப்பாகும். ஏனைய மாகாணங்களில் இந்த நிர்வாகக் கட்டமைப்பு ஏற்கனவே உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற போதிலும், வடக்கில் அத்தகைய நிலைமை இருக்கவில்லை. கூடிப்பேசுவதற்கான இடம் முதல், இருந்து செயற்படுவதற்கான அலுவலக இடம் வரையில் எல்லாவற்றையுமே புதிதாக உருவாக்க வேண்டிய நிலையிலேயே அவர்கள் மாகாணசபையின் பொறுப்பை ஏற்றிருந்தார்கள்.

இந்த நிலைமையில் அரசியல் அனுபவம் மிகுந்த தலைவர்களைக் கொண்டுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வடமாகாண சபையை கடந்த ஒரு வருட காலத்தில் சரியான முறையில் வழிநடத்தியிருக்கின்றதா, அவர்களை வழி நடத்துவதற்கான புறக்கட்டமைப்புக்களையாவது உருவாக்கி யிருந்ததா என்பது கேள்விக்கு உரியதாகியிருக்கின்றது. சட்டத்துறையில் நீண்ட அனுபவம் உள்ள ஒருவரை முதலமைச்சராகக் கொண்டு வந்ததன் மூலம் மாகாண சபை ஆட்சி முறையில் உள்ள குறைபாடுகள், தமிழ் மக்களுடைய தேவைகள் என்பவற்றையும், அரசாங்கம் எந்த வகையில் மாகாண சபை முறைமையை துஷ்பிரயோகம் செய்கின்றது, அதன் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள்கூட எந்த வகையில் மறுக்கப்படுகின்றன என்பதையெல்லாம் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சர்வதேச அளவில் வெளிக் கொண்டு வருவார் என்ற எதிர்பார்ப்பும் அதிகமாகவே இருந்தது.

ஆனால், வடமாகாண சபை மிகவும் குறைவாக உள்ளவற்றைக் கொண்டு செயற்படத்தக்க வகையில் அதனை வழிநடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் பிறந்து வளர்ந்து நடை பழகுகின்ற ஒரு குழந்தையின் நிலையிலேயே வடமாகாண சபை செயற்பட ஆரம்பித்திருந்தது. அதனை வழிநடத்தி, கூட்டமைப்பினர் நடை பழகச் செய்திருக்க வேண்டும்.

முதலாம் ஆண்டு நிறைவடைந்து, இரண்டாம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற முதலாவது அமர்வின் சபை நடவடிக்கைகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா சபையில் பிரசன்னமாக இருந்து அவதானித்திருந்தார். அந்த நேரம் மாகாண அமைச்சர்கள் தொடக்கம் முதலமைச்சர் வரையிலான சபையின் தலைமை மீது ஆளும் கட்சி உறுப்பினர்களே சரமாரியாகத் தமது அதிருப்திகளைக் கொட்டியிருந்தனர். சீற்றத்தோடு கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

அமைச்சரவைக் கூட்டங்களில் என்ன பேசப்படுகின்றது, என்னென்ன முடிவுகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பது பற்றி தங்களுக்கு எதுவுமே தெரியாதிருக்கின்றது என்று அவர்கள் நேரடியாகவே குற்றம் சுமத்தியிருந்தார்கள். அரசாங்கத்தைப் போன்று இவர்களும் ஏதேச்சதிகாரத்துடன் நடந்து கொள்கின்றார் களோ என்று சந்தேகமாக இருக்கின்றது என்றும் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

மாகாண முதலமைச்சரும்சரி, அமைச்சர்களும்சரி, அந்தப் பதவிகளுக்குப் புதியவர்கள். அலுவலக நிர்வாகக் கட்டமைப்புக்களில் அனுபவமுள்ள அதிகாரிகள் அவர்களுக்கு சிநேகபூர்வமாக எடுத்துக் கூறி வழிநடத்தத்தக்க சூழல் வடமாகாண சபையில் இல்லை. ஏனென்றால், வடமாகாண ஆளுனர் அரசாங்கத்தின் நேரடி நிறைவேற்று அதிகாரியாக இருந்து அரசாங்கத்தின் செயற்பாடுகளை முழுமையாகச் செயற்படுத்துவதில் முழுமூச்சோடு செயற்பட்டு வருகின்றார். அவருடைய செயற்பாடுகள் அரசியல் மயமானது. மாகாண சபையின் அதிகாரிகளை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்து ஏற்கனவே செயற்பட்டு வந்தவர், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமை சபையின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னரும்கூட, தனது போக்கில் எந்தவிதமான மாற்றங்களையும் செய்வதற்கு அவர் தயாராக இல்லை.

இதன் காரணமாகவே மாகாண சபையின் பிரதம செயலாளருக்கும் முதலமைச்சருக்கும் இடையில் பதவி ரீதியாக அலுவலக ரீதியான முரண்பாடுகள் ஏற்பட்டு, அது நீதிமன்றம் வரையில் சென்றிருந்தது. அந்த முரண்பாடு இன்னுமே களையப்படவில்லை. எனவே, இத்தகைய ஒரு சூழலில் முதலமைச்சரும் மாகாண அமைச்சர்களும், அவைத்தலைவரும் மிகவும் நிதானமாகவும் பொறுப்போடும் கவனமாகவும் செயற்பட வேண்டிய தேவை இருக்கின்றது. அமைச்சரவை என்ற ரீதியில் தங்களுக்குள் கூட்டுப் பொறுப்புடனும் சபையின் உறுப்பினர்களை ஒன்றிணைத்து மாகாண சபை என்ற வகையிலான கூட்டுப் பொறுப்புடனும் இணைந்து செயற்பட வேண்டியிருக்கின்றது.

இத்தகைய செயற்பாட்டு முறைமையை வளர்த்தெடுப்பதற்கு, தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் என்ற ரீதியில் கூட்டமைப்பினருக்கு கூடிய பொறுப்பு இருக்கின்றது. மாகாண சபையினரை அவர்கள் போக்கில் விட்டுவிட்டு தாங்கள் தங்களுடைய போக்கில் செயற்பட முடியாது. அனைவரும் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டியதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. இதனை உணர்ந்து அனைவரும் முரண்பாடுகளைக் களைந்து இணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு இனியாவது செயற்படுவார்களா?

நன்றி

தமிழ்கிங்டொம் (www.tamilkingdom.org)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களை எப்படி தண்டிப்பது??

...நாட்டு நடப்பு...

மேர்வின் வத்தளையை பிறப்பிடமாகக் கொண்டு தனது வயது முதிர்ந்த பெற்றோருடன் வாழ்ந்து வந்தான். எந்தவொரு உடன்பிறப்புக்களும் அவனுக்கில்லை. பெற்றோருக்கு அவனே ஒரே ஒரு வாரிசு எக்பதால் சிறுவயது தொடக்கம் மிக செல்லமாகவே வாழ்ந்தான்.

அந்த வயது முதிர்ந்த பெற்றோருக்கு உள்ள மனக்கவலை என்னவெனில் தங்களின் காலத்திற்கு பின் அவன் தனித்துப்போய் விடுவான் என்பதே. அவனது தகப்பனார் கொழும்பு 'நவலோக்கா' நிறுவனத்தில் மண் அகழும் பார ஊர்தியின் சாரதியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

அவர் பணியை விட்டு ஓய்வுபெற்ற வேளையில், ஒரு கணிசமான தொகையை ஊழியர் சேமலாப நிதியில் இருந்து பெற்றுக் கொண்டார். அரச நிறுவனமொன்றில் பணிபுரிந்திருந்தால் ஆயள் கால முழுவதும் ஏதோ குடும்பத்தை கொண்டு செல்ல ஓய்வூதியமாவது கிடைத்திருக்கும். ஆனால் அவர் பணிபுரிந்த இடம் ஒரு தனியார் நிறுவனமாகும். இருப்பினும் 'நவலோக்கா' இலங்கையில் முன்னணி வகிக்கும் மிகப்பெரிய தனியார் நிறுவனங்களில் ஒன்று.

அரச நிறுவனங்களை விட அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு எக்கச்சக்கமான சலுகைகள் உண்டு. அரச நிறுவனங்களில் பணிபுரிந்து ஓய்வு பெறுபவர்களுக்கு ஒரு தொகை பணிக்கொடையும், மாதா மாதம் ஓய்வூதியமும் கிடைக்கும். இந்த வருடம் முதல் அப்பணிக்கொடை சலுகைகளை புதிய நியமனம் பெற்ற அரச ஊழியர்கள் இழந்துள்ளனர்.

பணிக்கொடை மூலம் கிடைக்கப்பெறும் ஒரு தொகை பணத்தைக் கொண்டு நிரந்தரமான தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து கொள்ளலாம். ஆனால் இப்பொழுது அது நிறுத்தப்பட்டு வங்கிகள் மூலம் இலகு வட்டிக்கு அரசாங்கம் குறித்த ஊழியர்களுக்கு கடன் வழங்கி வருகின்றது. பலர் அவ்விதம் கடன் பெறுவதில் நாட்டமில்லாதிருப்பதுடன் மாதா மாதம் கிடைக்கப்பெறும் ஓய்வூதியத்திலே எப்படியோ காலத்தை கழித்து வருகின்றனர்.

மேர்வினின் தகப்பனார் ஓய்வு பெற்றபின் கிடைத்த முழுப்பணத்தையும் நகரில் பிரபல்ய நிதிக் கம்பனி ஒன்றில் வைப்பு செய்திருந்தார். வங்கிகளை விட நிதிக் கம்பனிகள் அதிக வட்டியையும், பங்கு இலாபத்தையும் தம் வாடிக்கையாளர்களுக்கு நேர்மையுடன் செலுத்தி வந்தாலும் நாட்டில் பல நிதிக் கம்பனிகள் முறையாக இயங்காததினால் அவை இழுத்து மூடப்பட்ட சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன.

மேலும் அவை அவ்விதம் இழுத்து மூடப்பட்டதினால் அங்கு பாரிய தொகையை வைப்புச் செய்த வாடிக்கையாளர்களின் கதி அதோ கதி ஆன பல சம்பவங்களை நாம் அறியாமலல்ல. நிதிச்சட்டதிட்டங்களின் படி நாட்டில் எந்தவொரு நிதிக்கம்பனியும் இயங்குவதாகில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்விதம் பதிவு செய்யப்பட்ட வங்கிகள், நிதிநிறுவனங்கள் ஆகியவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு மாத்திரம் மத்தியவங்கி பொறுப்பு கூறும்.

மத்திய வங்கியில் அவ்வாறான நிதி நிறுவனங்களை பதிவு செய்யும் போது ஒரு கணிசமான தொகையை மத்திய வங்கியில் குறித்த நிதி நிறுவனங்கள் வைப்பு செய்ய வேண்டும். சில வேளை அவை வங்குரோத்து நிலையை அடையும் போது மத்திய வங்கி அவற்றுக்கு உதவ முன்வரும். இன்று நம் நாட்டில் பல நிதி நிறுவனங்கள் போலியானவை என கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து தங்களிடம் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களின் பெயர்பட்டியலை மத்தியவங்கி பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக பகிரங்கப்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல, போலியான நிதி நிறுவனங்களில் பண கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டாமெனவும் எச்சரிக்கை செய்துள்ளது. இருப்பினும் அதிக வட்டியை எதிர்பார்த்து அவ்வாறு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டவர்கள் பலர் தங்கள் முழு வைப்பு பணத்தையும் இழந்துள்ளார்கள்.

மேர்வினின் தகப்பனார் நல்ல அனுபவசாலி அத்துடன் நல்ல கல்வி அறிவும் உள்ளவர் என்பதால் மாதா மாதம் நியாயமான வட்டியையும், வருடா வருடம் பாரிய பங்கு இலாபத்தையும், பெற்றுத் தரும் நிதிக்கம்பனி ஒன்றிலேயே வைப்பு செய்து பணத்தை பெற்று வந்ததால் அக்குடும்பம் சிறப்பாக இயங்கியது. மேலும் அவர் தன் மகனை மிகச் செல்லமாக வளர்த்து வந்ததால் அவனை எங்கேயாவது வேலைக்கு சேர்த்துவிட அவர் விரும்பவில்லை.

மாதா மாதம் கிடைக்கும் வட்டித் தொகை அக்குடும்பத்திற்கு போதுமானதாக இருந்தது. இருப்பினும் வயது வந்த ஓர் ஆண் மகன் எத்தனை நாளைக்குத் தான் எந்தவித தொழிலும் இன்றி வீட்டில் அடைபட்டு சும்மா இருப்பது? எமது நாட்டில் இன்று ஆண்களைப் போன்று பெண்களும் வேலைக்குச் செல்லும் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இன்றைய வாழ்க்கை செலவை பொறுத்தமட்டில் வீட்டிலுள்ள அனைவரும் உழைக்க வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது.

மேர்வினின் பெற்றோர் அவனுக்கு எப்படியாவது திருமணமொன்றை செய்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அதனால், மணமகள் தேவை எனும் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் இராஜகிரி பகுதியில் இருந்து நல்ல வரன் கிடைத்தது. உடனே எந்தவித தாமதமும் இன்றி அவனுக்கு பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர்.

மணமகளின் பகுதியினரும் நடுத்தர குடும்பத்தை சார்ந்தவர்கள். மேர்வின் அவனது குடும்பத்தில் ஒரே பிள்ளை என்பதால் அவன் வேலையற்றவன் என்ற பிரச்சினை அங்கு பெரிதாக கணிக்கப்படவில்லை. அவனது மனைவி அரசாங்க பாடசாலை யொன்றில் ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்து வந்ததால் அவர்களின் குடும்பத்தை கொண்டு செல்வதில் பொருளாதார கஷ்டங்கள் அவ்வளவு பெரிதாக அங்கு காணப்படவில்லை.

திருமணம் இடம்பெற்று ஒரு வருடத்துக்குள் மேர்வினின் பெற்றோர் இருவரும் இறைவனடி போய் சேர்ந்தனர். நிதிக்கம்பனியில் தகப்பனாரால் வைப்பிலிடப்பட்ட முழுப்பணத்திற்கும் மேர்வின் உரித்தாளியானான். மேலும் குடும்பத்தில் சொத்து தகராறுக்கு இடமே இருக்கவில்லை. பெற்றோரின் வீடும், காணியும் அவனுக்கே உரித்தாகியது. அது மாத்திரமல்ல அங்குள்ள உல்லாச விடுதியொன்றில் ஒப்பந்த அடிப்படையில் அவனுக்கு மேற்பார்வையாளர் தொழிலும் கிடைத்தது.

மேர்வினின் குடும்பம் மிக சிறப்பாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் தனது வாரிசுகளை கண்ணால் பார்க்கும் சந்தர்ப்பம் தன் பெற்றோர்களுக்கு கிடைக்கவில்லை என்ற மனக்கவலை மேர்வினுக்கு இருந்து வந்தது. மேர்வின் அவனது குடும்பத்தில் ஒரே ஒரு ஆண் வாரிசாக இருந்தாலும் அவன் தனித்து விடவில்லை.

மேலும் அவனுக்கு என்று அழகான இரண்டு ஆண் குழந்தைகளை இறைவன் வழங்கியுள்ளதால், நிதமும் தன்னைப்பற்றி கவலை கொண்ட பெற்றோரின் ஆத்மா இப்பொழுது சாந்தி அடையும் என நம்பினான். ஆனால் தன் குழந்தைகளை அவர்கள் பார்த்திருப்பார்களே ஆனால் இன்னும் சந்தோசம் அடைந்திருப்பார்கள் என்று அவன் நினைக்காத நாளே இல்லை.

இருப்பினும் அவனின் பெற்றோரின் இறை வேண்டுதல் பயனற்றுப் போகவில்லை. அவர்களின் மகன் இன்று தனி மரமில்லை. இரண்டு சிங்கக் குட்டிகளின் தந்தையல்லவா! மேர்வினின் மனைவி தனது இரு குழந்தைகள் மீது மிக அன்பாக இருந்தாள். அவள் கற்பிப்பது வீட்டிற்கு அருகில் உள்ள பாடசாலை ஒன்றில் என்பதால் பிள்ளைகளை கவனிப்பதில் எவ்வித இடையூறுகளும் ஏற்படவில்லை. அவளின் பெற்றோர் மற்றும் சகோதரர்கள் அவளின் குழந்தைகளை நன்கு கவனித்து வந்தனர்.




அப்பகுதியில் அவள் ஆங்கில ஆசிரியை என்பதால் வெளிநாட்டு பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் வாய்ப்பு மிக இலகுவாக கிடைத்தது. சுமார் மூன்று வருட ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற குடும்பத்தில் சகலரினதும் விருப்பத்துடன் சுவீஸ் நாட்டுக்கு பறந்தாள். அவள் வெளிநாடு சென்றபடியால் பிள்ளைகளின் நாளாந்த நடவடிக்கைகளுக்காக மேர்வின் வேலையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டியிருந்தது.

தற்பொழுது அவனது முழு அவதானமும் தன் இரண்டு பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை ஊட்டி, சமூகத்தில் சிறப்பான தொழில்களில் அவர்களை அமர்த்துவதே அந்த நோக்கம் அவனுக்கு மாத்திரமல்ல அவனது மனைவிக்கும் இருந்து வந்தது.

மனைவி வெளிநாட்டில் சம்பாதிப்பதனால் மேரிவினுக்கு என்றுமே பணத்தட்டுப்பாடு ஏற்படவில்லை. தனது குடும்பத்துடன், பிள்ளைகளை பார்த்துக்கொண்டு அவள் அருகில் இல்லாத ஒரு குறையை அவன் மனதில் இருந்து வந்தது. குழந்தைகளுக்கு எவ்வளவோ வசதிகள் இருந்தாலும் பெற்றோரின் அன்பு, பாசம், அரவணைப்பு என்பன மிக அத்தியவசியமானதே அதிலும் தாயின் பாசத்திற்கு ஏது ஈடு?

வெளிநாட்டில் அவளின் ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும் அவள் மீண்டும் நாடு திரும்பாமல் இருப்பதற்கான காரணத்தை அறிய முடியாமல் இருந்தது. ஆனால் அவள் அலைபேசி மூலமும், ஸ்கைப் தொடர்பு மூலமும் எப்பொழுதும் தனது குடும்பத்தாருடன் தொடர்பில் இருப்பாள்.

மேர்வினின் அயல் வீட்டுக்கு சுவிசிலிருந்து ஓர் உறவினர் வந்திருந்தார். மேர்வினுக்கு அவரை ஏற்கனவே தெரிந்திருந்ததால் நேரில் அவரை சந்தித்தான். அவர் கூறிய விடயங்கள் அவனின் தலையை சுழரச்செய்தது. அவ்வளவுக்கு அத்தகவல் அதிர்ச்சியை கொடுத்திருந்தது.

அவள் நாடு திரும்பாமைக்கான காரணத்தை மேர்வினும், குடும்பத்தாரும் நன்கு தெளிவுபடுத்திக் கொண்டனர். எமது நாட்டில் சில பாடசாலைகளில் இடம்பெறும் சம்பவங்கள் கூட எம்மை ஆச்சரியப்படுத்துவதில்லையா? சில அதிபர்களின் விரும்பத்தகாத செயற்பாடுகளை அவ்வப்போது ஊடகங்கள் வெளிக்கொணர்வு செய்தும் அவர்கள் இன்னமும் திருந்துவதற்கான அறிகுறிகள் கூட காணக்கிடைப்பதில்லை. இந்த அதிபர்கள் கல்வித் துறைக்கு முன்மாதிரியாக செயல்பட வேண்டியவர்களாக இருந்தும் அங்குள்ள பெண்பாலார்களுடன் நடந்து கொள்ளும் முறை கவலைக்குரியதாகவே உள்ளது.

மேர்வினின் மனைவியும் அவள் சுவிசில் கற்பித்த பாடசாலை அதிபரின் காதல் வலைக்குள் சிக்கி அவரை திருமணம் செய்து கொண்டதே மீண்டும் தாய்நாடு திரும்ப அவளுக்கு தடையாக இருந்தது.

- பாலையூற்றான் -

# விநோதங்கள்

## தன் சாதனையை தானே முறித்த அமேரிக்கர்



அமெரிக்காவின் சிகாகோ நகரை சேர்ந்த 35 வயது Nik Wallenda கடந்த சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவில் உள்ள பள்ளத்தாக்கு மற்றும் நயாகரா நீர்வீழ்ச்சியை கண்களை கட்டிக்கொண்டு கயிற்றில் நடந்து சாதனை படைத்துள்ளார். இந்நிலையில் தற்போது அமெரிக்காவின் சிகாகோ நகரில் மிகப்பெரிய மூன்று அடுக்கு மாடி கட்டிடங்களுக்கு இடையே கயிற்றை கட்டி அதில் கண்களை கருப்புத்துணியால் கட்டியபடியே கடந்து சாதனை புரிந்துள்ளார். இம்முறை பாதுகாப்புக்காக கீழே வலை கூட அமைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வயிறு என்ன மீன்தொட்டியா

பிரேசில் நாட்டு நபர் ஒருவருக்கு சமீபத்தில் மருத்துவ பரிசோதனை செய்தபோது அவரது குடலில் 125செ.மீ அளவிலான பெரிய மீன் ஒன்று உயிருடன் இருப்பதை மருத்துவர்கள் கண்டுபிடித்தனர். உடனடியாக அறுவை சிகிச்சை மூலம் அந்த மீனை வெளியே எடுக்க மருத்துவர்கள் முடிவு செய்து அம்மீனை உயிருடன் மீட்டும் உள்ளனர்.



## உயிரை எடுத்த செல்பி



ஸ்பெயினின் குடால்க்வீர் நதிக்கரைப் பகுதியில் 19ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ட்ரியானா மேம்பாலம் அமைந்துள்ளது. கடந்த திங்கள்கிழமை சுற்றுலாவுக்கு சென்ற சில்வியா ராச்சேல(23) என்ற மருத்துவ மாணவி மேம்பாலத்திலிருந்து தொங்கியபடி தனது கைப்பேசியில் செல்.'.பி எடுக்க முயற்சித்துள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக 15 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து பலத்த காயமடைந்துள்ளார். இதையடுத்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## காதலியை தாக்கிய முதியவர்

தைவான் நாட்டினைச் சேர்ந்த ஹுவாங் சென் (79) என்ற முதியவர், சூ கெய் (47) எனும் பெண்ணை காதலித்து வந்துள்ளார். பணக்காரரான சென் தனது துணையாக இருப்பதற்காக, கெய்க்கு மாதம் 2 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளார். சமீபத்தில் சூ கெய்யின் நடத்தையில் சென்னுக்கு சந்தேகம் வந்ததால், அவர் தனது வீட்டில் தூங்கி கொண்டிருந்த வேளையில் சென் அவரை கட்டி போட்டு கத்தியால் கெய்யின் மூக்கு, காதுகள் மற்றும் உதடுகள் உள்ளிட்ட உறுப்புகளை துண்டு துண்டாக வெட்டி, அவற்றை கழிப்பபறை கோப்பைக்குள் போட்டு மறைத்து அவசர பிரிவுக்கு அழைப்பு விடுத்துள்ளார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சூ கெய், கூர்மையான கத்தியால் குத்தப்பட்டுள்ளதால், அவரது முகத்தை சீரமைப்பது மிகவும் கடினம் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

## 4 வயது கொலையாளி

அமெரிக்காவில் உள்ள லோரைன் நகரில் 4 வயது சிறுவன் ஒருவன், தனது சகோதரியுடன் (3) விளையாடி கொண்டிருந்த போது அவன் தனக்கு கிடைத்த 40 கேலிபர் கைத்துப்பாக்கியை வைத்து கொண்டு, விளையாட்டாக தனது சகோதரியை மிரட்டி கொண்டிருந்துள்ளான். ஆனால் அவனையும் அறியாமல் திடீரென துப்பாக்கியில் இருந்து பாய்ந்த குண்டு, அவனது சகோதரியின் தலையை துளைத்துள்ளது. இதனால் படுகாயமடைந்த அச்சிறுமி தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசித்த புலி

- நன்றி - தமிழ்கூடல் -



கருங்கல் ஜல்லி கறுப்புத் தார் கலவையை, மிக நேர்த்தியாக ஆவி பறக்க... பறக்க... ராட்சஷ இயந்திரம் நிலத்தில் கொட்டிக் கொண்டே போக... ஏழுமலை தனது முரடான பூட்ஸ் காலாலும், ஆயுதத்தாலும் சமன்படுத்தி தொடர்ந்து கொண்டிருந்தான். "கட மடா" சத்தத்துடன் மற்றொரு ராட்சஷ ரோடு ரோலர் அவன் பின்னால் உருண்டோடி வந்து கொண்டிருந்தது.

ஏழுமலை மனைவி மீனாட்சி, பூக்களுக்கு நீர் தெளிப்பதுபோல, தார் திவாலையை கற்கள் மேல் தெளித்து முன்னே போய்க் கொண்டிருந்தாள். கற்களும் பூக்கள் போன்று அந்த நடுநிசி நிலவு வெளிச்சத்தில் ஜொலி ஜொலித்தன.

"யப்பா குமாரு, கலவ சரியில்ல ஒழுங்கு மரியாதையா ஜோலிய பாரு.. இல்ல கொமட்ல குத்துவேன்... ராஜுக்கா ஆகட்டும், வீட்ல புருஷனுக்கு ஒண்ணும் ஆயிடாது. குல தெய்வம் பாத்துக்கும்.."

கான்ட்ராக்டர் யதுகுலராவ் விடிவதற்குள் திட்டமிட்டபடி வேலையை முடித்தாக வேண்டிய கட்டாயத்தில்... இயந்திரங்களின் சப்தத்தையும் மீறி காட்டுத்தனமாகக் கத்திக் கொண்டிருந்தார். அழுக்குச் சட்டை போட்டிருந்த அவரும் ஒரு தொழிலாளி போன்று காணப்பட்டார்.

ஏழுமலைக்கும் அவன் மனைவிக்கும் யதுகுலராவ் தெய்வம் போன்றவர்.

"சாமி, நீங்க இல்லேன்னா.. நாங்க இல்ல. உங்க கருணையாலதான் எங்க குடும்பம் பசி இல்லாம இருக்கு" என கையெடுத்துக் கும்பிட்டு நன்றி விசுவாசத்தை ஒவ்வொரு முறையும் காட்டும்போதும் ஏழுமலை கண்களில் கண்ணீர் திரளும்.

விவசாயத்துக்காக காத்திருந்து.. காத்திருந்து வயிற்றில் வரி விழுந்ததுதான் மிச்சம். பல வருடங்களாக மழை வேறு மாயாஜாலம் காட்டுகிறது. அண்டை மாநிலங்களும் தண்ணீர் காட்டுகிறது.

எலிக்கறி அவலத்தில் இருந்தும், தற்கொலையில் இருந்தும்.. தப்பித்துக்கொள்ள குடும்பங்கள் கூட்டம் கூட்டமாக வேலை தேடி நாலாபுறமும் புறப்பட்டபோது, ஏழுமலை தெரிந்தவரின் சிபாரிசு மூலமாக ரோடு கான்ட்ராக்டர் யதுகுலராவிடம் வந்து சேர்ந்தான்.

"ஏழுமலை, நான் ரோடு கான்ட்ராக்டர். வேலை கொஞ்சம் கரடுமுரடானதாக இருக்கும், ராத்திரி பகல் மாறி மாறி வேலை பாக்க வேண்டியிருக்கும். உனக்கும் உன் சம்சாரத்துக்கும் சரிப்பட்டு வரும்னா, தாராளமா வேலையப் பார்க்கலாம்."

வேலை கிடைத்துவிட்டதை, ஏழுமலையால் நம்ப முடியவில்லை.

"என்னப்பா... அப்படியே நின்னுட்டே"

"பட்டணத்துல கூட நல்லவங்க இருக்காங்க. நீங்க தெய்வங்க.."

"எல்லோரும் நல்லவங்கதான்... ஏழுமலை"

பழக்கமில்லாத தொழில் என்றாலும், பழகிக்கொள்வதில் ஏழுமலைக்கும் மீனாட்சிக்கும் எந்த சிரமமும் இல்லை. பூட்ஸ் போட்டு கற்கள் மீது நடக்கும்போது ஏழுமலை தட்டுத்தடுமாறி விழுந்து... மீனாட்சியை விலா நோக சிரிக்க வைத்தான்.

"பொறந்த புள்ள கணக்கா... என்னய்யா கேலிக் கூத்து" என்றாள். போனில் இந்தச் சமாச்சாரத்தை கிராமத்தில் இரண்டாம் வகுப்புப் படிக்கும் மகனிடம் சொல்லி, அவனையும் சிரிக்க வைத்தாள்.

"கண்ணா நல்லா இருக்கியா... வேளைக்குச் சாப்பிடுறியா"

"ஆமாம்மா... ஸ்கூல்ல முட்டை எல்லாம் போடுறாங்க"

கான்ட்ராக்டர் செல்போனுக்குப் பாட்டியுடன் சேர்ந்து மகன் கண்ணன் போன் பண்ணுவதை இரண்டு நாளுக்கு ஒருமுறை மீனாட்சி எதிர்பார்ப்பாள். இவளும் வீட்டின் எதிரே இருக்கும் மளிகைக் கடைக்குப் போன் போட்டு வரச் சொல்லிப் பேசுவாள். அப்படியே கடனாக மளிகைச் சாமான்கள் கொடுக்கச் சொல்லி வேண்டுவாள். அவர்கள் சென்னைக்கு வந்து ஐந்தாறு மாதம் ஆகிறது. மாதம் தவறாமல் ஊருக்குப் போவார்கள். வேலை அதிகமாக இருக்கும் சமயத்தில் மீனாட்சி மட்டுமாவது போய் வருவாள்.

ஏழுமலை இந்த ரோடு போடும் வேலையை போகப் போக நேசிக்கவே ஆரம்பித்தான். திடீரென டாங்கிகளுடன் போருக்குப் புறப்பட்டுப் போவது போல மெஷின்களோடு சென்று, ரோடு போட்டு வந்த அழகை... பகலில் ஏழுமலை போய் பார்ப்பான்.

சலவை செய்த நீண்ட கறுப்புப் புடவை தரையில் காய வைத்தது போல என்ன அழகான காட்சி. நேற்று இல்லாத மாற்றத்தைப் பார்க்கும் பொதுமக்களின் முகம் மலர்வதையும், ஒரு கணம் ரசிப்பதையும் நெடுநேரம் ஓர் ஓரமாக நின்று ஏழுமலை ரசிப்பான். பாதசாரிகள் கொஞ்சம் மெல்ல நடந்து பூவின் மென்மையை உணர்வார்கள்.

ஏழுமலை போன்ற வெளியூர்க்காரர்களுக்கு வேலை கொடுத்தது போல தங்குவதற்கும் இடம் கொடுத்து இருந்தார் கான்ட்ராக்டர் யதுகுலராவ். வேன் வைத்து அழைத்துப் போவார்கள். வந்து விடுவார்கள். கடந்த இரண்டு நாட்களாக வேன் வரவில்லை. வேலையும் இல்லை.

"என்னங்க... ஏதேதோ பேசிக்கிறாங்க. ராஜுக்கா கூட இனிமே வேலை இருக்காதுன்னு நேத்து சொல்லிட்டுப் போச்சு. நாம என்ன பண்ணப் போறோம்?"

மீனாட்சி ஒருவித மிரட்சியுடன் கேட்டாள். வேலை இல்லாத பழைய நிலையை நினைத்துப் பார்க்கும் ஏழுமலை மனதுக்குள் பயம் தடம் பதித்தது. என்ன பதில் சொல்வது என ஏழுமலை தவித்துக் கொண்டிருந்தபோது, புழுதி பறக்கவிட்டு ஒருவித அவசரமாய் முதலாளி கார் வந்தது.

கதவைத் திறந்து அமைதியாக இறங்கிய யதுகுலராவ் வேட்டி சட்டையில் இருந்தார். இன்றும் வேலை இல்லையா?

"என்ன ஏழுமலை... எங்க உன் சம்சாரம்? பாவம்..! ஓய்வில்லாம வேலை பார்த்து ரொம்பக் களைச்சுப் போயிட்ட. உங்களுக்கு நல்ல சேதி. நம்ம டெண்டர் முடிஞ்சு போச்சு. புது டெண்டர் கிடைக்க கொஞ்ச நாளாகும். அதுவரைக்கும் ஊருக்குப் போய் சாதி சனத்தோட சந்தோஷமா இருங்க. வேலை அமைஞ்சதும் தகவல் தெரிவிக்கிறேன்."

தொழிலாளர்கள் துவண்டுவிடக் கூடாது என முதலாளி சாதுரியமாகப் பேசியது கிராமத்துக்காரனான ஏழுமலைக்குப் புரியாமல் இல்லை. தரவேண்டிய ஊதியத்துடன், பயணத் தொகையும் கொடுத்து வேட்டி சேலையும் கொடுத்தார்.

மகனுக்குப் பிடித்த விளையாட்டுப் பொம்மை இனிப்பு வகைகளை வாங்கிக் கொண்டு அன்றே ஊர் திரும்பினார்கள்.

அம்மா, அப்பாவை ஒன்றாகப் பார்த்த ஏழுவயது மகனுக்குத் தீபாவளி கொண்டாட்டம்.

"ஐ.. ஜாலி... எங்க ஸ்கூல்ல அடுத்த வாரம் ஆண்டு விழா. நீங்களும் வரணும் என்ன?" என்றான்.

மகனைப் பார்த்ததும், தங்களுடைய சோகம் மறந்து இயல்பு நிலைக்குத் திரும்பினார்கள். மீனாட்சியிடம் அவளது தாய் ரகசியமாக கேட்டாள். பெட்டி படுக்கையுடன் திரும்பியது அவளையும் கலவரப்படுத்தி இருக்க வேண்டும்.

"என்னம்மா மீனாட்சி... போன எடத்துலேயும் வேலை இல்லேனுட்டாங்களா?"

"அதெல்லாம் இல்லம்மா... நீ வேணா பாரேன்... கொஞ்ச நாள்ல கூப்பிடுவாங்க. நாங்க நல்ல பேரு எடுக்கிற மாதிரி உழைச்சிருக்கோம். முதலாளி பெரிய சிபாரிசு, செல்வாக்கு உள்ள மனிதர். டெண்டர் கிடைச்சதும் கூப்பிடுவார்" என்ற மீனாட்சியின் பேச்சில் பலமான நம்பிக்கை.

அப்பாவிடம், "நீங்க போடுற ரோடு எப்படிப்பா இருக்கும்" என்றான் கண்ணன்.

"ம்... உனக்கு நேத்து புது சிலேட்டு வாங்கிக் கொடுத்தேன் இல்ல. அது போல புத்தம் புதுசா கருப்பா இருக்கும்"

"அப்பா சென்னையில் கரண்டு கட் ஆகாதா... ஐஸ் வண்டிக்காரர் சொன்னாருப்பா"

"இங்கதான் கண்ணு. ஆறுமணி நேரம்னு சொல்லி வச்சு கட் பண்றாங்க. அங்க கட் பண்ண மாட்டாங்க"

பையன் பிரமிப்பாய்... கேள்வியும் பதிலுமாக அடுக்கிக் கொண்டே போக...

மளிகைக் கடை வேலை ஆள் தலை தெறிக்க ஓடி வந்து மூச்சு வாங்கினான். ஏழுமலை அவன் வந்த வேகத்தைப் பார்த்துப் பயந்தே விட்டான்.

இந்த இரண்டு மாதமாக மளிகைக்கு கடை பாக்கி ஷ்ருபாய் ஆயிரத்தைத் தாண்டி இருந்தது. அதைக் கேட்கத்தான் கூப்பிடுகிறாரோ?

"என்னங்க யோசனை... உங்களுக்குப் போன்"

ஏழுமலை, அந்தக் கடை ஆளைப் போல தலைதெறிக்க ஓடிப் போனவன், அடுத்த சில நிமிடங்களில் மூச்சு வாங்க திரும்ப வந்து மீனாட்சி முன் நின்றான். முகத்தில் மகிழ்ச்சி. வார்த்தையில் சந்தோஷம்.

"மீனாட்சி நம்ம கான்ட்ராக்டர்தான். வேலை ரெடி ஆயிடுச்சாம். நம்பளை உடனே நாளைக்கே புறப்பட்டு வரச் சொல்லிட்டார்."

தொடரும்.. .. ..

# சிக்காத மனம்

- கீதா -

தூங்க மறுத்த கண்களுக்கும், ஏங்கித் தவிக்கும் நெஞ்சத்திற்கும் பதில் சொல்ல முடியாது. இமைகளை இழுத்து மூடியபடி கிடந்தாள் கீதா. மூடிய கண்களுக்குள் தெரிந்த இருளுக்குள் ஒளிர்ந்த வளையங்களுக்கிடையில் இரு கண்கள் வந்து சிரித்துப் போனது. பல இடர்களைத் தாங்க வலிமை தந்த கண்களது. இதயங்களற்று இயந்திரமாகிப் போன மானிடர்க்கிடையில் என் இதயம் பூக்கச் செய்கின்ற கண்களது.

இருக்கின்ற காதலை உணர்த்த முடியாது. இல்லை உணர்த்தத் தேவையில்லையென உணர்ந்தபடி போகிற அவசர உலகில் இன்னுமென்னை வருடிக் கொடுத்தபடி, எனைச் சாகாமல் வைத்திருக்கின்ற கண்களது. பல நேரங்களில் என் வாழ்க்கைப் படகு காற்றைக் கிழித்துக் கொண்டு பயணப்படத் தென்றலில் அசைந்து கொண்டிருந்த பாயது.

திருவிழாவிற்குக் கட்டியிருந்த மைக்செட் அலறலில் அவள் மௌன மனம் விழித்து கொண்டது. அன்றும் இதே திருவிழா ஓலம்தான். அத்தை மகள் பாண்டிச்செல்வி என்கிற செல்வியும் இவளும் வருடம் ஒருமுறை பங்குனி மாத மாரியம்மன் திருவிழாவில் சந்திக்கிற சந்தோசங்களைச் சிந்தித்தபடி சிரிப்பும் பேச்சுமாக.....

இன்றைய படிப்பு நாளைய வாழ்க்கை இப்படி எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி இருந்த கிராமத்து வாழ்க்கையில் இளமையே குளுமைதான். பெரியவர்கள் அறியாது கிசுகிசுத்த மரக்கிளையில் ஆடும் சிட்டுக் குருவிகளாய் ஆடும் மனதுடன் கடந்து செல்லும் ஒவ்வொரு பால்குடமோடு வாசல் வரை போய் பின் மச்சுக்குள் வந்து அடங்கினாலும் சிறகடித்துப் பறந்த மணங்களோடு மலரும் பூக்களாய்...

பாட்டியின் ஐந்து பிள்ளைகளின் குடும்பமும் சேர்ந்ததில் இருக்க, படுக்க இடமில்லாது போன சின்ன பழங்காலத்து வீடு. ஆனால் எல்லோர் மனங்களும் விசாலமாய் இருந்ததனால் ஒருவரை ஒருவர் இடித்தபடி. ஆனால் புழுக்கமில்லாது இருந்த நேரம்.

எங்கள் சந்தோசம் காண மழை வந்தது. எங்கள் உள்ளங்களில் இருந்த பிரகாசம் கண்டு பொறாமையால் நின்று போனது மின்சாரம்.

கம்பிக் கேட்டு மட்டும் இழுத்து விட்டபடி பெண்கள் உள்ளேயும் ஆண்கள் வெளியேயும் படுத்தபடி பழங்கதைகள் அவரவர் வயதொத்தவர்களுடன் பேசியபடி...

மழையில் நனைந்தபடி ஓடி வந்த உருவம் அவளையும் நனைத்துப் போடும் என்று அறியாது, அவளும் செல்வியும் பள்ளிக் கதைகளும் கல்லூரிக் கதைகளுமாக...

உருவம் கண்டு தீக்குச்சி உரசி மெழுகுவர்த்தி பற்ற வைத்து அத்தை உயர்த்திப் பிடித்து "என்ன தியாகு இந்நேரம்?" எனக் கேட்க, "காலேஜ் முடிஞ்சு கிளம்ப நேரம் ஆயிடுச்சு சித்தி. மழை வேற"

"சாப்பிட்டியா?"

"இல்லையே சித்தி! ஒரே மழை. எங்கேயும் இறங்க முடியலை"

படுத்திருந்த பெண்கள் தாண்டி வரமுடியாத நிலையில் சாப்பாடு பரிமாறல் வாசலிலேயே ஒரு ஸ்டூல் போட்டு,

படுத்திருந்த கீதா, செல்வி தலைக்கு மேலே சாப்பாடு பாத்திரங்கள் பறந்தபடி பரிமாறப்பட்டு..

கேலி பேசி அலுத்துப் போயிருந்த இருவரும் வந்திருப்பது கீதாவிற்கு முறைப்பையன் என்றதும் மெல்ல செருகிக் கொண்டிருந்த கண்கள் பிரகாசமாக இருளிலும் ஒளிர்ந்தது.

சிசுகிசுப் பேச்சுகள் குலுங்கும் சில்லரைச் சிரிப்புகள் மீண்டும்....

பேச்சிலிருந்து யார்? எவர்? என்று காதுகள் தீட்டியபடி கிரகித்துக் கொண்டனர். இதுவரை பாத்திராத ஒரு தூரத்துச் சொந்தம் இருளில் இப்பொழுதும் காணமுடியாது தூங்கிப்போனார்கள்.

காலை வேளையில் இரவு வெள்ளிகளைத் தொலைத்த வானமாய் இவர்களும் நடந்தது மறந்தபடி, வேலைகளில் ஆனால் புதிதாய் வானில் உதித்த பகலவனாய் அவன் எதிர் வந்த போது கூசும் கண்களுடன் நிலம் பார்த்தபடி மலர்ந்த தாமரையாய் அவள் ஏன் மாறினாள்?

குதி போட்டபடி இருந்த அவளது நடை, இப்பொழுது ஜதிபோடும் நடன மங்கையின் பதிவுகளாய் ஏன் ஆனது? எப்பொழுதும் தன்னை வெளிப்படுத்தியபடி இருந்த அவள் இப்பொழுது அவளை மறைத்துக் கொள்ள ஏன் இத்தனை பிரயத்தனம் எடுத்துக் கொள்கிறாள்? சட்டென நிமிர்ந்து எதிரொளியைப் பார்க்கும் அவளது ஞானச்செருக்கு கொண்ட கண்கள் எதைத் தொலைத்தோமென தேடுகிற பாவனையில் தவிக்கிறதே ஏன்?

24வருட வாழ்வில் 24மணி நேரப்பொழுது சொற்பம் தான். ஆனால் அந்த 24மணி அவளின் மிச்ச பொழுதுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டதென்னவோ உண்மை.

பேசிக் கொள்ள முடியாத உறவுகள் அவை.

பார்வையில் பரிமாறியது எதை? தொட்டும் தொடமாலும் பட்டும் படாமலும் சந்தித்துச் சந்தித்து மீண்ட கண்கள் சாயங்காலக் கூடு திரும்பும் பறவையாய் அவரவர் வீடு திரும்ப எத்தனித்த போது சூழல்கள் மீறி நிலை குத்தி ஒன்றோடொன்று நின்றது. இன்னமும் கண்களுக்குள்.

திசை மாறி, இரை தேடி எத்தனை தூரம் கடந்தாலும் கூடவே வரும் கண்களாய் அவை எப்பொழுதும் அவள் துயர்துடைத்தபடி உயர் படிதனில் ஏற்றிய படி சிரமங்கள் வரும் போது சிந்தனைக்குள் வந்து சிரித்துப் போகும் கண்களால் இவள் மனமும் சிரித்து விடும்.

பருவங்கள் மாறுகையில் பறந்து செல்லும் பறவையாய் பறந்தாலும் பயணத்தில் பின்னோக்கி செல்லும் மரமாய் இல்லாது. கூடவே வரும் நிலவாய் எட்டா தூரத்தில் எப்படி அந்தக் கண்களால் தொடர முடிகிறது?

ஒவ்வொரு முறையும் இதழ் விரித்து மலராய் மலரும் எண்ணம் வரும் போதெல்லாம் மணம் அறியாது காம்பொடிக்கப் படுகையிலும் ஆதரவாய் காயம் தடவும் அந்தக கண்கள்....

முழங்கையிலும், கால் பாதங்களிலும் கொசுக்கடி. தாங்காது முழித்துப் பார்க்கையில் அணைந்தி ருந்தது கொசுவர்த்தி சுருள்.




கொசுக் கடிக் குப் பயந்து மேல் கிடந்த பிள்ளையின் கை நகர்த்தி எழுந்து அலுப்பில் அயர்ந்திருந்த கணவன் குமாருக்குப் போர்த்தி விட்டு கொசுவர்த்தி சுருள் பற்ற வைத்து படுக்கையில் விழுந்தாள். அறையெங்கும் மூச்சு விட முடியாத நெடி. நெடி தாங்கச் சொல்லும் கொசுவின் கடி திணறல்களோடு தூங்க மீண்டும் கண் மூடினாள். இருளுக்குள் ஒளிர்ந்த வளையங்களுக்கிடையில்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## அலைதல்



காற்று

சுழன்றெழும்பிக்
கடல் கலைக்கும்...

அலை

நுரைதள்ளிக் கரை
தேடியோடிவரும்

நின்று ஓய்வெடுக்கா அலை
காற்றலைத்தலைத் தேடிக்
கடல் புகும்...

காலங்கள் நீண்டு
நாட்கள் வயதடைந்து
வருடங்களாய் உதிர்ந்தும் -
காதல்
மாறாக் காற்றும் கடலலையும்

அலைந்தும்...கரை நடந்தும் -
மீளப்புகுந்தும்...
மாறாக் காதல் ...

இருள் நுழைந்த
இடமெல்லாம் - ஒளி
ஏற்றும் நிலவு -

என்
கால் நனைக்கும்
கடலலை – காதல்
சொல்லும்...

நீயும் நானும்

உணவின்றிய - இறுதி
நாட்களிற்கூட
விழியூடு வளர்த்த காதல்

வீடு விட்டுப் - பின்
வயல்தாண்டி – வனம்
புகுந்து
வரும் வழியிற்
கொள்ளி வைக்கக்
கொடுப்பினையில்லாப்
பிணம் புதைத்து..

பெற்றோரைப் பிரிந்து
நீ தொலைந்து....

இருந்தாயா?
இறந்தாயா?
என்றறியவிடா மக்கட்
கடலிடையே - பிரிந்து

பிரித்து
மந்தையாக்கப்பட்டு...

நீ
இறந்திருப்பின் - உன்
இறுதி உயிர்வழிந்த விழி
யென்னைத் தேடிற்றா? என
எண்ணி –

நாவறண்ட போதும்
விழிவற்றா நாட்கள்.... இறந்து
வருடங்களாகிப் போன பின்னும்..

நீயற்ற நானும்..
காற்றற்ற கடலும்...
நம்மிருவர் காதலும்...
எஞ்சிக்கிடக்குமிம்
மண்ணில்

எவனோ – வன்
புணர்ந்த உடல் கொண்டு
தேடியலைவதெல்லாம்...... ..?

உன்
கல்லறையுண்டெனில்
எங்கென்று
என்
கனவில் வந்தாவது சொல்.

– – மாயன் – –

## கண்ணீர் ஏரி



கண்ணீர் ஏரியில் அலைகளெழுகின்றன
போர் மூண்டு வராதெனப் பகன்ற
மோதல் தவிர்ப்புப் பிராந்திய எல்லையில்
கண்ணீர் ஏரியில் அலைகளெழுகின்றன

சிங்களத்தால் அழுகிறேன் நான்
எலும்புக் கூடுகளாய் நடமாடும்
மானிடர் மீது பிரயோகிக்கும்
அந்தச் சுமை மிகுந்த
ஆயுதங்களின் கனம் தாங்க இயலாது
கைகாலுடைந்து மாண்டு போவர்
ஏரியின் கரைகளில்
உடல் சிதறுண்டு வீழ்வர்
கண்ணீர் ஏரியின் நீர் வற்றிப் போகும்
கண்ணீர் ஏரியில் உதிரமே ஊறும்

எவரது மரணத்துக்காக ஒப்பாரி
வைத்திடவென்று
அறியவில்லை நாம்
எவ்வளவுதான் அழுதிடவென்றும்
சொல்லித் தருபவர் யார்
ஏரி முழுவதுமே செந்நிறம்
இப்பொழுது
கண்ணீர் ஏரி சலனமற்றுக் கிடக்கிறது

– நூல் : மறுபாதி –
சிங்கள மூலம் : மஹேஷ் முனசிங்க
தமிழில் – ஃபஹீமாஜஹான்

## "நேர்மை"

கணண்கி நேர்மையால்
மதுரை எரிந்தது
அரிச்சந்திரன் நேர்மையால்
வாய்மை நிலைத்தது

அறிவின் நேர்மையால்
ஞானிகள் தோன்றின(ர்)
ஆதவன் நேர்மையால்
உலகம் தளைத்தது

மும்தாஜ் நேர்மையால்
தாஜ்மகால் பிறந்தது
அன்னை தெரேசாவால்
அன்பு வாழ்ந்தது

காதலின் நேர்மையால்
காவியம் பிறந்தது
ஈதலின் நேர்மையால்
தர்மம் வாழ்ந்தது.

காற்றின் நேர்மையில்
உயிரினம் வாழ்ந்தது
கல்வியின் நேர்மையால்
வள்ளுவம் நிலைத்தது

பாரதி நேர்மையால்
கவிதை வளர்ந்தது
சாரதி நேர்மையால்
சகுனம் பிழைத்தது



நூல் : பொன்னாவரை - சேனையூர் இரத்தினா

## வேண்டுதல்

சும்மா இருக்காதே,
எம்மாத்திரமோ நீ,

இன்னும் உனைப்போட்டு
அன்னார் செயல்கட்கு

வடமொழியாள் வந்துன்னை
திடமாயிரு- முன்னைச்

அனைத்துலகாள் உன்னை
வினையாற்றச் சென்றாலும்

மறக்கும் தமிழருக்கு
இறக்கும் வரையும்நின்

ஆசிரியர் - மாணவர்க்குன்
வாசிப்பைத் தூண்டிவிடு!

பாவாணரைப் போன்று
பாவேந்தர்போல் புலவர்

சும்மா இருந்தாயேல்
அம்மா தமிழ்த்தாயே, அடியேனின்

தொற்றமிழே நடமாடு!
இது வரையில் கண்டுள்ளாய்!

இனைற் படுத்துகிறார்!
அசையாதே - தளராதே!

வட்டம் இடக்கூடும்?
செயலெல்லாம் மறவாதே!

அணைப்பாள் இணங்காதே!
வெளிநாடு - நினை உன்னை

மறவாமல் நினைவூட்டு!
எண்ணமே தோன்றச்செய்!

அளவற்ற பற்றூட்டு!
வளரட்டும் உனது புகழ்!

பணியாற்ற ஊக்கமளி!
பாடும்படி ஆக்கு!

சுற்றிடுவார் பகையாளர்?
வேண்டல்இதே!

– தாமரைத்தீவான்–
[ஊச்சந்தீவு, கிண்ணியா]

## வடமாகாணசபை – நிர்வாக நிலமை





மத்தியில் அதிகாரம்
குவிக்கப்பட்டு வட
மாகாணத்தில் அதிகாரம்
குறைக்கப்பட்டதால் தொடர்ந்து
நித்தமும் அதிகார பரவலுக்காய்
சத்தம் போட்டு வருது அச்சபை!

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு
அமோக ஆதரவை பெற்று
வடமாகாண சபையை, தம்
வசப்படுத்தி ஆழ்வதினால்,
தொடர் கதையாகும்
அடாவடி அத்து மீறல்கள்
நடமாட விடாத அதிகாரம்
குடாநாட்டுக்கு அவசியந்தான்!

கட்டாக்காலி மனித - மிருகங்களை
கட்டுப்படுத்த இயலவில்லை - உயர்
மட்ட சபை இருந்தும் - அது
திட்டம் பல தீட்டினாலும்
சட்டம் நீதி தர்மம் ஒழுங்கு
கெட்டுப்போகும் குடாநாட்டில்
மட்டுப்படுத்தப்பட்ட அதிகார
வரையறையால் வடமாகாணசபை
பொட்டளவு கூட புதிய திட்டங்களை
புதுமை செய்ய முடியாத நிலை!!

சேனையூரான்

# எல்லோரும் ஏகலைவர் தாமோ!!

ஏகலைவன் தொன்மோடிக் கூத்துப் பிரதிக்கு வழங்கிய முன்னுரை.
இக்கூத்து குறுகிய நேர அளவில் நயக்கக் கூடியதும் சிந்திக்கத் தூண்டுவதுமான படைப்பாக, குறிப்பாக இளையோருக்குப் பொருத்தமான வகையில் படைக்கப் பட்டிருக்கிறது. ஈழச்சூழலில் புரிந்து கொள்ளக் கூடியதும் கூத்துக் கலைக்கேயான மொழிப்பாவனை கொண்டதாக இருப்பது இதன்பலம். ஆயினும் புலம்பெயர் சூழலின் இளையோர் மத்தியில் இக்கூத்தின் மொழிப் பயன்பாடு எந்த அளவிற்குத் தொடர்புபடும் என்பது பரீட்சார்த்தத்திற்குறியது.

### கடந்தவாற தொடர்ச்சி.. ...

மேலும் புலம்பெயர் இளையோரது விளக்கமும் வியாக்கியானமும் அறியப்படுவதும் மிகவும் முக்கியமானது. ஏனெனில் முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியை பாரிய கொடைவள்ளல் எனப்பதிந்திருந்த புத்தியில் புலம்பெயர் சிறுசொன்றின் கூற்று புரட்டில் போட்டு விட்டிருக்கிறது.
ஒரு தடியை நாட்டிவிட மன்னருக்குப் புத்தி வரவில்லையா? மக்களது வரிப்பணத்தில் செய்த தேரை எப்படித் தன்னிச்சையாக முட்டாள்த்தனம் பண்ணமுடியும்? இதுபோன்ற கேள்விகள் சமூகப் பண்பாட்டு மீள்வாசிப்பிற்கு அடிப்படையானவை. எனவே தமயந்தி போன்ற கலைஞர்கள் அவற்றையும் வெளிக்கொண்டு வருவதில் பங்காற்ற வேண்டும்.
மேலும் மன்னர்களது ஆதிக்கங்களும், கடவுளருக்குரிய சடங்குகளும், சுரண்டல்களும் பெருமிதங்கள் நிறைந்த வரலாறுகளாக எமக்குத் தந்துவிடப்பட்டிருக்கின்ற சூல்நிலையில் ஏகலைவன் கதை அதற்கப்பாலான மனிதர்கள் அவர்களது வாழ்க்கை, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றையும் அறியத் தருகிறது.
வேடர் குலத்தவனான ஏகலைவன் ஆதிக்கம் கட்டமைந்திருக்கும் நிறுவனத்துள் கற்கவிளைவதாக வனையப்பட்டிருக்கும் கதையுள் ஒழிந்திருக்கும் அரசியல்தான் என்ன? இது ஆழ்ந்த உரையாடலுக்குரியது.
வேடர்களின் விற்பயிற்சி வாழ்வாதாரத் தேடலுக்கானது, தற்காப்பிற்கும் தேவைப்படும் பட்சங்களில் தாக்குதல்களுக்குமானது. ஆனால் சத்திரியர்களது விற்பயிற்சி போருக்கானது, வெல்லும் வகையில் கொல்லும் நோக்குடையது.
ஆதிக்க நோக்குடையது, கொள்ளைக்கும் சுரண்டலுக்குமானது.
ஏகலைவன் எத்தகைய அறிவையும் திறனையும் பெற்றுக் கொள்ள துரோணரிடம் வருகின்றான் என்பதும் சிந்திக்கப்பட வேண்டியது.
சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் ஆதிக்க சாதிக் கோவில்களிற்குள் புகுவதற்கு மாற்றாக ஒடுக்கப்பட்ட சாதியரது



விழாக்களும், வேள்விகளும், பொங்கல்களும், படையல்களும், மடைகளும், காவியங்களுடன், வல்லியப்பரும், பெரியதம்பிரானும் முறையே ஆழ்வாரகவும் தக்கயாகேசுவரராகவும், முகம் மாறாமல் பெருமிதம் கொண்டிருப்பின் ஈழத்தமிழர்தம் சமூகப்பண்பாட்டு வரலாறு எத்தகைய பரிமாணங்கள் கொண்டிருக்கும்?
காலனித்துவம், நவகாலனித்துவம, உலகமயமாக்கம் என ஆதிக்கங்களுள் விரும்பி அள்ளுண்டு செல்லும் எல்லோரும் ஏகலைவர் தாமோ?

**முற்றும்.....**

கலாநிதி சி.ஜெயசங்கர்
நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவிப்பிடியில் அண்ணா – தம்பி



தமிழ் சினிமாவின் வெற்றி பிரதர்ஸ் என்றால் சூர்யா-கார்த்தி தான். ஆனால், சில நாட்களாக இவர்களது படங்கள் முன்பு போல் ஹிட் ஆவது இல்லை. இந்நிலையில் சூர்யா அடுத்து "மாஸ்" படத்திலும், கார்த்தி "கா'மோரோ" என்ற படத்திலும் நடிக்கவுள்ளனர். இந்த இரண்டு படமும் ஆவி சம்மந்தப்பட்ட கதை தான் என்று நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றது. ஒரே நேரத்தில் அண்ணனும், தம்பியும் பேய் சார்ந்த கதையில் நடிப்பது என்ன செண்டிமெண்டோ!

## ரம்யா – மறைவு



நடிகை ரம்யா கர்நாடக மாநிலத்தில் உள்ள மாண்டியா தொகுதியில் எம்.பியாக இருந்தவர். சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் தேர்தலில் நின்று தோல்வியை தழுவினார். தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் மீண்டும் சினிமாவில் நடிக்க முயற்சி செய்துகொண்டிருந்த நடிகை திடீரென கடந்த ஒருவாரமாக காணவில்லை என்ற செய்தி கன்னட திரையுலகை திடுக்கிட வைத்துள்ளது.

## விஜய் – ஆர்யா (சிக்கலா? விருந்தா?)



கத்தி படத்திற்குப் பிறகு விஜய், சிம்புதேவன் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார். இதில் விஜய்க்கு ஜோடியாக ஹன்சிகா மற்றும் சுருதி ஹாசன் நடிக்கிறார்கள். இப்படத்தின் படப்பிடிப்பு நவம்பர் மாதம் 10ம் தேதி சென்னையில் தொடங்கவுள்ளது.



அதேபோல், 'ஆல் இன் ஆல் அழகுராஜா' படத்திற்குப் பிறகு ஆர்யாவை வைத்து ராஜேஷ் புதிய படம் ஒன்றை இயக்கவுள்ளார். இப்படத்தில் ஆர்யாவிற்கு ஜோடியாக தமன்னா நடிக்கவுள்ளார். சந்தானம் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். இப்படப்பிடிப்பும் நவம்பர் மாதம் 10ம் தேதி சென்னையில் தொடங்கவுள்ளது.



## 10 எண்றதுக்குள்ள நேபாளம் நோக்கி

சங்கர் இயக்கியிருக்கும் "ஐ" படத்திற்குப் பிறகு விக்ரம் நடித்து வரும் படம் "பத்து எண்றதுக்குள்ள". இதில் விக்ரமிற்கு ஜோடியாக சமந்தா நடிக்கிறார். மேலும் பசுபதி மற்றும் இந்தி நடிகர் ஜாக்கி ஷெராப் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். இப்படத்தை பாக்ஸ் ஸ்டார் நிறுவனத்துடன் இணைந்து ஏ.ஆர்.முருகதாஸ் தயாரிக்கிறார். இதுவரை 80 சதவிகிதம் படப்பிடிப்பு முடிந்துள்ள நிலையில் அடுத்த கட்ட படப்பிடிப்புக்காக நேபாளம் செல்லவுள்ளனர்.

## வாலு படம் முடிவு



வாலு படத்தில் நடிக்கும் போது சிம்புவுக்கும் ஹன்சிகாவிற்கும் காதல் ஏற்பட்டது. இதனை இருவரும் அதிகாரபூர்வமாக அறிவித்தனர். சில வாரங்களிலேயே இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் காதலை முறித்து விட்டதாக அறிவித்தனர். இதனால் 'வாலு' படம் சிறிது காலம் முடிவடையாமல் நின்றது. ஒருவாறு தற்போது இப்படத்தின் இறுதி நாள் படப்பிடிப்பு நடந்து வருகிறது.

## பொங்கலுக்கு "ஐ"




'ஐ' படம் தியேட்டர்களில் ரிலீஸாகும் என்று செய்திகள் வந்துகொண்டிருக்கும் நிலையில் தற்போது இந்த படத்தின் தயாரிப்பாளர் ஆஸ்கார் ரவிச்சந்திரன் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருப்பதாகவும், அதனால் போஸ்ட் புரடொக்ஷன் பணிகள் செய்ய பணம் இல்லாததால்தான் படத்தின் ரிலீஸ் தாமதமாகிறது என்று தகவல்கள் வெளிவருகின்றன. 'ஐ' திரைப்படம் தற்போது பொங்கலுக்கு வெளியாகும் என கூறப்படுகின்றது.

## லிங்கா 12இல்

ரஜினி நடிக்கும் 'லிங்கா' படம் விரைவில் திரைக்கு வர தயாராகி கொண்டு இருக்கிறது. பாடல் காட்சிகள் வெளிநாடுகளில் படமாக்கப்பட்டுள்ளது. ரஜினியின் பிறந்த நாளான டிசம்பர் 12ந் தேதி படத்தை வெளியிட முழு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## படத்தலைப்பு மாற்றம்



என்னை அறிந்தால் படம் தற்போது முடியும் தருவையில் உள்ள நிலையில் சமீபத்தில் அஜித்தின் அறிமுக பாடலை படமாக்கினார்கள். இப்பாடல் பாட்ஷா படத்தில் ரஜினி ஆடிப்பாடும் ரா ரா ராமைய்யா பாடல் போன்று உருவாக்கப்பட்டுள்ளதாம்.

அத்துடன் கவுதம் மேனன் படத்தலைப்பை மாற்றுவதற்கு காரணம் இதே பெயரில் ஷகிலா நடித்த பலான திரைப்படம் ஒன்று ஏற்கனவே வந்துள்ளதாம். அஜீத் பட தலைப்பின் மாஸ் குறித்து கவலைப்பட்டு கொண்டு இருந்த விஜய் ரசிகர்களின் தீவிர முயற்சியால்தான் இந்த தகவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# சினிமுரசு

இயக்குனர் நந்தகுமாரின்

## திரை விமர்சனம்

## கல்கண்டு

### கஜேஷ், டிம்பிள் நடிக்கும்



நாகேஷ், ஆனந்த்பாபு இவர்களை அடுத்து மூன்றாவது தலைமுறையாக கஜேஷ் அறிமுகமாகியுள்ள திரைப்படம்தான் கல்கண்டு.

அண்ணனை போல தானும் டாக்டர் படிப்பு படிக்க வேண்டும் என்பது கஜேஷின் ஆசை. ஆனால் பிளஸ் 2வில் குறைந்த மதிப்பெண்களே வாங்கியதால் தன்னால் டாக்டராக முடியாது என்று வருத்தப்படும் கஜேஷை அவரது அண்ணன் தேற்றுகிறார். தனக்கு தெரிந்த ஒரு மந்திரி இருப்பதாகவும், அவரிடம் பணம் கொடுத்து மெடிக்கல் சீட் வாங்கித்தருவதாகவும் அண்ணன் உறுதி கூறுகிறார்.

இதன்படி அமைச்சரிடம் பணம் கொடுக்க சென்ற கஜேஷ் தன்னுடைய ஒரிஜினல் நம்பருக்கு பதில் தவறான நம்பரை கொடுத்துவிடுகிறார். இதனால் பணம் கொடுத்தும் கஜேஷ"க்கு மெடிக்கல் சீட் கிடைக்கவில்லை. பின்னர் அமைச்சரிடம் சென்று நியாயம் கேட்கும்போதுதான் தான் செய்த தவறு கஜேஷ"க்கு தெரிய வருகிறது. ஆனால் இதை வீட்டில் சொல்ல பயந்துகொண்டு தனக்கு மெடிக்கல் சீட் கிடைத்துவிட்டதாக வீட்டில் உள்ளவர்களிடம் பொய் சொல்லிவிட்டு சென்னைக்கு வருகிறார்.

சென்னையில் அவருக்கு கஞ்சாகருப்பு, சாமிநாதன், ஆகியோர் நண்பர்களாகின்றனர். நண்பர்களின் ஐடியாப்படி தான் மாற்றி கொடுத்த ரிஜிஸ்தர் நம்பர் உள்ளவன் யார் என்பதை கஜேஷ் கண்டுபிடிக்கிறார். படத்தின் நாயகி டிம்பிள் சோப்டே தான் தன்னால் மெடிக்கல் படித்து வருவதை அறிந்ததும் அவரை சந்தித்து உண்மையை சொல்லி தன்னுடைய பணத்தை தருமாறு கேட்கிறார். நாயகி மறுக்கவே, அப்படியானால் தன்னை காதலிக்கும்படி கேட்கிறார் கஜேஷ். இதனால் அதிர்ச்சி அடையும் நாயகி எடுக்கும் முடிவு என்ன? கஜேஷில் தில்லுமுல்லை அவருடைய வீட்டில் உள்ளவர்கள் கண்டுபிடித்தார்களா? என்பதுதான் மீதிக்கதை.



படம் முழுவதும் அலட்டல் இல்லாத நடிப்பில் அசத்தியுள்ளார் கஜேஷ். இயக்குனர் நந்தகுமாரின் திரைக்கதை போரடிக்காமல் செல்கிறது. ஆங்காங்கே ஒருசில டுவிஸ்டுகளை வைத்து படத்தை கிளைமாக்ஸ் வரை திறமையாக கொண்டு செல்கிறார். மொத்தத்தில் கல்கண்டில் இனிப்பு அதிகம் உள்ளது.



## சினிமா கிசு கிசு

- ஒரே நேரத்தில் சூர்யா, கார்த்தி என இருவருடனும் நடிப்பதால் மிகவும் உற்சாகத்தில் உள்ளார் நயன். கார்த்தியின் காஷ்மோரா படம் திகில் கலந்த பேய் படமாக தான் இருக்கும் என நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
- சமீபத்தில் ஸ்ரீதேவியை அவமதிக்கும் அளவுக்கு ராம்கோபால் வர்மா நடந்து கொண்டதாகவும், ஸ்ரீதேவியின் தீவிர ரசிகரான கபில்ஷர்மா இந்த காரணத்திற்காக படத்தில் இருந்து விலகியதாக கூறப்படுகிறது.
- நான்கு வருடங்களுக்கு பிறகு இப்போது மீண்டும் சஞ்சய் குப்தாவின் 'ஜாஸ்பா' என்ற படத்தில் நடிக்க வருகிறேன். அடுத்த வருடம் ஜனவரியில் இதன் படப்பிடிப்பு துவங்குகிறது.
- சமீபத்தில் தெலுங்கு மொழியில் வெளியான Jabardasth என்ற திரைப்படத்தில் நடித்த நடிகை ராஷ்மியின் ஆபாச வீடியோ ஒன்று யூடியூப் இணையதளத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.
- ஜீவாவை வைத்து இயக்கவிருக்கும் படத்தில் ஜீவாவிற்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கவுள்ளதாக செய்திகள் வந்திருக்கின்றன. இதற்குமுன் ஜீவாவுடன் நயன்தாரா 'ஈ' படத்தில் நடித்திருந்தார்.
- காதல் ஜோடிக்கு செப்டம்பர் 7ஆம் தேதி திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்தது. இந்நிலையில் வருகிற 9ஆம் தேதி அட்லி – ப்ரியாவின் திருமணம் நடைபெறவிருக்கிறது. அதனைத் தொடர்ந்து அன்று மாலை சென்னை ஹயாத் ஹோட்டலில் திருமண வரவேற்பும் நடைபெறவிருக்கிறது.
- கவுண்டமணி கதாநாயகனாக நடித்துள்ள '49 ஓ' படம் கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. நீண்ட காலமாக திரைப்படங்களில் நடிக்காமல் இருந்த கவுண்டமணி நடித்துள்ள இந்தப் படத்தை கௌதம் மேனனின் உதவியாளரான ஆரோக்கியதாஸ் இயக்கியுள்ளார்.
- அனுஷ்கா, சோனாக்ஷி சின்ஹா நடிப்பில் கே.எஸ்.ரவிகுமார் இயக்கி வரும் "லிங்கா" திரைப்படத்தின் டீஸர் சமீபத்தில் வெளியாகி இண்டர்நெட்டையே கலக்கியுள்ள நிலையில் தற்போது லிங்கா கதை இண்டர்நெட்டில் லீக் ஆகியுள்ளதாக அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வயர்லெஸ் கமெரா

Netgear எனும் நிறுவனம் வயர்லெஸ் முறையில் இயங்கக்கூடியதும் வீட்டினை கண்காணிக்கக்கூடியதுமான புதிய ஸ்மார்ட் கமெராவினை அறிமுகம் செய்துள்ளது. Netgear Arlo எனும் இக்கமெராவானது HD தொழில்நுட்பத்தில் வீடியோ பதிவு செய்யும் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் ஒரே நேரத்தில் 130 டிகிரி கோணத்தில் படம் பிடிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. மேலும் இரவு நேரங்களிலும் துல்லியமாக படம் பிடிக்கக்கூடிய வகையிலும், நீர் உட்புகாத வகையில் இக்கமெரா உருவாக்கப்பட்டுள்ளது.

## WhatsApp புதிய வசதி



குறுந்தகவல்கள், புகைப்படங்கள் மற்றும் வீடியோ கோப்புக்களை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளும் வசதியை தரும் WhatsApp ஆனது தற்போது மற்றுமொரு புதிய வசதியினை பயனர்களுக்கு அறிமுகம் செய்துள்ளது. இதன்படி ஸ்மார்ட் கைப்பேசி அல்லது டேப்லட்டிலுள்ள WhatsApp அப்பிளிக்கேஷனில் நீல நிறத்திலான இரு சரி அடையாளங்கள் காணப்படுமாயின் உங்களால் அனுப்பப்பட்ட செய்தியினை உங்கள் நண்பர் படித்து விட்டார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் பார்வையிட்ட நேரத்தினையும் காட்டுகின்றது.

## தங்கத்தில் ஜொலிக்கும் ஃபோன்



Blackberry நிறுவனம் அண்மையில் தனது புதிய வடிவமைப்பில் உருவான Blackberry Passport ஸ்மார்ட் கைப்பேசியினை வெளியிட்டிருந்தது. இந்நிலையில் தற்போது 24 கரட் தங்க முலாம் பூசப்பட்ட புதிய பதிப்பினை எதிர்வரும் வாரத்தில் வெளியிடவுள்ளது.

4.5 அங்குல அளவு, 1440 x 1440 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்ட இக்கைப்பேசியானது Quad-Core Snapdragon 801 SoC, பிரதான நினைவகமாக 3GB RAM, சேமிப்பு நினைவகமாக 32GB என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது.

இவற்றுடன் 13 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களைக் கொண்ட வீடியோ அழைப்பினை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளது.

## கூகுளின் நீட்சி BOOK MARK



இணைய ஜாம்பவான் ஆன கூகுள் நிறுவனம் புதிய Bookmark Manager வசதியினை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்துள்ளது. முன்னர் Stars எனும் பெயருடன் கவர்ச்சியான பயனர் இடைமுகத்துடன் தரப்பட்டிருந்த வசதியே தற்போது Bookmark Manager எனும் நீட்சியாகும். இதன்மூலம் விரும்பிய புகைப்படங்கள் மற்றும் குறிப்புகள் அடங்கிய இணையத்தளங்களை சேமித்து வைக்கும் வசதி இதில் தரப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## ஒளி ஊடுபுகவிடும் கார்



தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியால் நாளுக்கு நாள் பல்வேறு மாற்றங்களுடன் பல பொருட்கள் அறிமுகமாகி வருகின்றன. இவற்றின் ஒரு அம்சமாக ஒளி ஊடுபுகவிடும் கதவுகளைக் கொண்ட கார்களும் விரைவில் அறிமுகமாகவுள்ளன. இதற்கான ஆராய்ச்சியில் Keio பல்கலைக்கழகத்தில் Media Design துறையில் கற்றுவரும் Susumu Tachi மற்றும் Masahiko Inami ஆகிய மாணவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

## Windows -8.1 உடனடி மொழிபெயர்ப்பு வசதி

skype Translate

உலகின் எந்த மூலையிலும் இருக்கும் உறவுகளை இணைப்பதில் சிறந்த சேவையினை வழங்கிவரும் Skype இல் மொழி பெயர்ப்பு எனும் புதிய வசதி தொடர்பான தகவல்கள் கடந்த காலங்களில் வெளியாகியிருந்தது.

அதாவது ஒரு மொழியில் பேசும்போது அதனை வேறொரு மொழியில் உடனடியாக மொழிபெயர்க்கும் வசதியினை மைக்ரோசொப்ட் நிறுவனம் வெளியிட்டிருந்தது.

## சார்ஜ் தீர்ந்து போகாமல் இருக்க சில வழிகள்



திடீரென ஸ்மார்ட் போனில் சார்ஜ் குறைந்து போனால் அவ்வளவு தான், அந்த அவஸ்தையை அனுபவித்து பார்த்தவர்களுக்கு தான் தெரியும். பற்றரியின் ஆற்றலுக்கு வரம்பு இருந்தாலும் கொஞ்சம் கவனமாக இருந்தால் பற்றரியின் ஆயுளையும், அதன் சார்ஜிங் ஆற்றலையும் அதிகரிக்கலாம்.

1. வெப்பநிலை உங்கள் பற்றரியை பாதிக்கலாம். போனைக் கூடுமானவரை சூரிய ஒளியில் நேரடியாகப் படும்படி வைப்பதைத் தவிர்க்கவும். இது குளிருக்கும் பொருந்தும்.
2. பற்றரியை முழுவதும் சார்ஜ் செய்வது நல்லது. ஆனால், உண்மையில் முழு சார்ஜ் செய்யாமல் பகுதி அளவு சார்ஜ் செய்வது ஏற்றது என வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர், அதாவது 40-80 சதவிகிதம் வரை போதுமானதாம்.
3. சார்ஜிங்கில் கவனிக்க வேண்டிய இன்னொரு வி'யம், முழுவதும் சார்ஜான பிறகு பிளக் செய்யப்பட்ட நிலையிலேயே விடுவதைத் தவிர்க்கவும். அதிகமாக சார்ஜ் ஆவதும் பற்றரியை பாதிக்கும்.
4. அதே போல அதிவிரைவு சார்ஜர் மற்றும் போலி சார்ஜர்களைப் பயன்படுத்தாமல் இருப்பதும் நல்லது.

# மண் மூடிய துயர வரலாறு – 1964 – 2014 சாஸ்திரி ஸ்ரீமா ஒப்பந்தம்

## 50 ஆண்டுகள் நிறைவு



இதுவும் இலங்கைத் தமிழர்களின் துயரக் கதைதான். பஞ்சத்தாலும் வறுமையாலும் அடிபட்டு, இலங்கைக்குப் பிழைக்கச் சென்று, குத்திக் குதறப்பட்ட இந்தியத் தமிழர்களின் துயரக் கதை. இந்தியர்கள், இலங்கையர்கள் இரு தரப்பினராலும் பேச மறுக்கப்படும் கதை.

தமிழக வரலாற்றில் கொடூரமான காலகட்டம் 1835-40. நிலப்பிரபுத்துவ முறை, சாதிக் கொடுமைகள், கோரப் பஞ்சம், துரத்தும் வறுமை... பல்லாயிரக் கணக்கானோர் பசியால் செத்த காலகட்டம். ஆங்கிலேயர்கள் சூழலைத் தனதாக்கிக்கொண்டார்கள். இந்தியாவையும் இலங்கையையும் ஆண்ட அவர்கள், இலங்கையில் தங்களுடைய ஆட்கள் நடத்திய காபி, தேயிலை, ரப்பர் தோட்டங்களுக்கு ஏழைத் தமிழர்களைக் குறிவைத்தனர்.

கங்காணிகள் மூலம் நடத்தப்பட்ட வேட்டை இது. ஒரு ஊரில் நுழைவது. நல்ல வேலை, நல்ல சாப்பாடு, நல்ல கூலி என்று ஆசை காட்டுவது. கொஞ்சம் பணத்தை முன்பணமாகக் கொடுத்து ஆட்களைக் கூட்டிச் செல்வது. தனு'கோடி வரை கால்நடையாகவே நடத்திச் செல்லப்பட்ட இவர்கள் அங்கிருந்து தோணிகள் மூலம் கடல் கடந்து, மீண்டும் கால்நடையாகவே இலங்கையின் தோட்டங்களுக்கு நடத்திச் செல்லப்பட்டனர்.

நடைப்பயணத்தின்போதே பலர் இறந்தனர். பணத் தாசையின் காரணமாக, கங்காணிகள் 100 பேரை ஏற்ற வேண்டிய தோணிகளில் 500 பேர், 1,000 பேர் வரை ஏற்றிச் சென்றதால், பல தோணிகளை ஆழி தின்றது. இப்படித்தான் ஆயிரக் கணக்கான ஏழைத் தமிழர்களுடன் பயணித்த 'ஆதிலட்சுமி" கப்பலும் கரைசேர்வதற்கு முன்பாகவே கடலில் மூழ்கியது. 1841-49-க்கு இடைப்பட்ட காலத்தில் மட்டும் 70 ஆயிரம் தமிழர்கள் இப்படிப் பலியானதைப் பதிவுசெய்திருக்கிறது 'கொழும்பு அப்சர்வர்" பத்திரிகை.

இங்கிருந்து சென்றவர்கள் கண்டி, ஹட்டன், மாத்தளை, புஸல்லாவ, நுவரேலியா எனப் பல்வேறு இடங்களிலும் அடர்வனங்களைத் திருத்திப் பெருந் தோட்டங்களாக மாற்றினார்கள். மலைகளில் சாலைகளை உருவாக்கினார்கள். சுரங்கங்களை வெட்டி ரயில் பாதை உருவாக்கினார்கள். கடுங்குளிரிலும் பனியிலும் ஓயாத மழையிலும் அட்டை, பூரான் கடிக்கு மத்தியில் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வரை உழைத்தார்கள். ஆனால், இவர்கள் வாழ்நிலையோ கு'ரூரமான கொத்தடிமைகளின் நிலையிலேயே இருந்தது.

மலையகத் தமிழர்கள் இலங்கையின் பொருளாதாரத்தைத் தூக்கிச் சுமந்தனர். இலங்கையர்களோ கள்ளத்தோணி, தோட்டக் காட்டான், வடக்கத்தியான், பறத்தமிழன், என்று பல வசைச் சொற்களைச் சொல்லி இழிவு படுத்தினார்கள். இந்திய வம்சாவளித் தமிழர்களை நாட்டை விட்டுத் துரத்த வேண்டும் என்று பேசினார்கள்.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் 1935 காலகட்டத்தில் அநீதிகளை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கினர். தஞ்சாவூரிலிருந்து ஹட்டனில் குடியேறிய கோ. நடேசய்யர், மலையக மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார். சி.வி. வேலுப்பிள்ளை, இளஞ்செழியன், இர. சிவலிங்கம் என அடுத்தடுத்துப் பல தலைவர்கள் மலையக மக்களின் அரசியலை முன்னெடுத்தனர்.

இலங்கையிலிருந்து மலையகத் தமிழர்களைத் துரத்துவதில் முனைப்பாக இருந்த அரசு, ஒருகட்டத்தில் 10 லட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக ஆக்கியது. ஏறத்தாழ 130 ஆண்டுகளாக இலங்கைக்காக உழைத்தவர்கள் அநாதைகளாக ஆக்கப் பட்டார்கள். இந்த 10 லட்சம் பேரையும் இந்தியாவுக்கு அனுப்ப முயன்றது இலங்கை. இந்தியாவோ ஏற்க மறுத்தது. ஒருகட்டத்தில் வேறு வழியில்லாமல், கிட்டத்தட்ட ஆளுக்குப் பாதி என்பதுபோல, இரு அரசுகளும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்தன. இதன்படி 5.25 லட்சம் பேர் இந்தியாவுக்குத் திரும்ப அழைக்கப்பட்டார்கள். 1964-ல் இலங்கை அதிபர் சிறீமாவும், இந்தியப் பிரதமர் சாஸ்திரியும் செய்துகொண்ட ஒப்பந்தம் நேற்றேடு 50 ஆண்டுகளை நிறைவுசெய்தது. உறவுகளை, உடைமைகளை, உரிமைகளை என இடைப்பட்ட 130 ஆண்டுகளில் கொஞ்சநஞ்சம் கிடைத்தவற்றையும் பறிகொடுத்து இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர் மலையகத் தமிழர்கள்.

இலங்கை 1948, பிப்ரவரி 4-ல் சுதந்திரம் அடைந்தது. டி.எஸ். சேனநாயகா அதிபர் ஆனார். இந்திய வம்சாவளி மக்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்ட மசோதாவை அவர் கொண்டுவந்தார். அதை ஆதரித்த 53 உறுப்பினர்களில் சுந்தரலிங்கம், எஸ். மகாதேவன் உள்ளிட்டவர்களும் அடக்கம். ஆனால், ஈழத்தந்தை செல்வநாயகம், "இன்று இந்திய வம்சாவளித் தமிழர் களுக்கு ஏற்பட்ட அவலம், நாளை ஈழத் தமிழர் களுக்கும் ஏற்படும்" என்று அன்றே எச்சரித்ததோடு, அதை எதிர்த்தும் வாக்களித்தார்.

இலங்கையின் பூர்விகத் தமிழர்களால் இவர்களுக்கு ஆதாயங்கள் இல்லை என்றாலும், தீமைகள் காத் திருந்தன. சிங்கள இனவெறி எப்போதெல்லாம் பூர்விகத் தமிழர்களைக் குறிவைத்ததோ, அப்போதெல்லாம் இவர்களையும் குறிவைத்தது. சிங்களவர்களின் கைக்கெட்டும் தூரத்திலிருந்த இவர்களது வீடுகளும் வணிகக் கூடங்களும் உயிர்களும் அவர்களின் வன்முறைக்கு இலக்காயின.

வளர வளரக் கவாத்து செய்யப்படும் தேயிலை மரங்களைப் போல இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களும் வரலாறு நெடுகிலும் வெட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியர் என்ற காரணத் தாலும் சாதியாலும் ஒவ்வொரு கணமும் ஒதுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 200 ஆண்டுகளாக ச் சிலுவை சுமப்பதுபோல இலங்கையைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான இடம் இலங்கை அரசியலில் இன்னமும் விளிம்பு நிலையிலேயே இருக்கிறது.

நன்றி இனி (இரா.வினோத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் -26

# சொல்லொன்று செயலொன்று



வி.என்.சந்திரகாந்தி

உண்மையை சொல்லப்போனால் நல்ல கொள்கைகளில் நம் அனைவருக்குமே பற்றுதலும் நம்பிக்கையுமுண்டு. ஆனால் அதைக் கடைப்பிடிப்பதிலேயே நாம் உறுதி பூண்டவர்களாக இல்லாமல் வாழ்க்கையை வீணடிக்கிறோம்.

நல்ல கொள்கைகள் என்று நாம் அறிந்தவற்றில் 'பொதுநலம் பேணல்', 'அஹிம்சையை கடைப்பிடித்தல்', 'பெண்ணியம் போற்றல்', 'சேவை மனப்பாங்கு' ஆகியன அனைவராலும் கடைப்பிடிக்க வேண்டிய மிகச் சிறந்த குறிக்கோள்களாகும். 'சுயநலமானது' பொது நலத்தில் அடங்கும் என்று மஹாத்மாகாந்தி கூறிவைத்தார். அதே போன்று ஜப்பான் போன்ற நாடுகள் கூட்டாக கட்டுப்பாட்டுடன் சமூக நோக்கில் எதையும் செய்கின்ற உயர் இலட்சியத்தை உருவாக்கி இருக்கின்றன. சமுதாய உணர்வு, கூட்டாக வேலை செய்தல் (Team work) இரண்டுமே அந்த நாடுகளை நாகரீகத்திலும் விஞ்ஞானத்திலும் உற்பத்தி திறனிலும் மேலோங்க வைத்துள்ளன. அதனால் நாட்டின் பொருளாதார வளம் குறிப்பிட்டு கூறும் அளவுக்கு உயர்ந்துள்ளதுடன் தனி நபர்களது கல்வி மற்றும் வாழ்க்கை வசதிகள் மேலோங்கிவிட்டன!

அடுத்து மஹாத்மா, 'ஹிம்சையை' எதிர்த்துப் போராடினார். உயிர்களை உணவுக்காக கொல்வதை, ஹிம்சை செய்வதை தடுப்பதற்காக மக்கள் மத்தியில் பாரிய பிரச்சார நடவடிக்கையை மேற்கொண்டார். எமது இந்து மதமும் பசுவதை உட்பட அனைத்து உயிர்வதைகளையும் கண்டிக்கின்றது. இந்தியாவில் பெரும்பான்மையான இந்துக்கள் சைவ உணவினையே ஏற்றுள்ளனர். மஹாத்மாகாந்தியின் பிரச்சாரத்தால் கவரப்பட்ட இலட்சக்கணக்கான வெளிநாட்டவர்கள் சைவ உணவையே உண்கின்றார்கள். விஞ்ஞானமும் மனிதனுக்கு சைவ உணவே சிறந்தது என சிபார்சு செய்கின்றது. மஹாத்மாகாந்தி இந்தியாவின் சுதந்திர போராட்டத்தையே அஹிம்சை வழியில் நடாத்தி வெற்றியீட்டியவர். திருவள்ளுவரும் புலால் மறுத்தலை சிறப்பித்து கூறியுள்ளார். 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்'. இன்று என்ன நடக்கின்றது பறவைகளையும், கால்நடைகளையும் இறைச்சிக்காகவே உற்பத்தி செய்கிறார்கள். குறுகிய காலத்தில் அதிக தசையை கொடுக்கக்கூடிய கோழி, மாடு, பன்றி போன்றவை வாழத்தொடங்கு முன்னரே மனிதனுக்கு உணவாக சமித்து விடுகின்றன. மேலதிக உற்பத்தி குளிர் சாதனப்பெட்டியில் இடப்பட்டு சேமிக்கப்படுகின்றன. இன்னும் ஏன்? மனிதனை மனிதன், இனத்தை இனம், ஒரு மதத்தினரை மற்றொரு மதத்தினர் இம்சை செய்து படுபாதகமாக கொலை செய்யும் காலமாக இது மாறிவிட்டது. ஐ.எஸ். போராளிகள் (Islamic State Militants) பணயக்கைதிகளையும் ஊடகவியலாளர்களையும் பெண்களையும் ஈவிரக்கமின்றி படுபாதகமான முறைகளில் கொல்வதைக்கண்டு அகில உலகமே அதிர்ந்து நிற்கின்றது. மனித சமுதாயத்திற்கு எமது முன்னோர் அஹிம்சை பற்றி போதித்ததுடன் அவ் வழியில் தாமும் நடந்து காட்டினர். தொடர்ந்து வந்த சமுதாயமும் அந்த வழியை பின்பற்றியிருந்தால் இன்று மனிதன் தேவனாகியிருப்பான்!

அடுத்து 'பெண்ணியம்' பற்றி சிந்திப்போம். பெண்ணியக்கருத்துக்கள் இன்று நேற்றுத்தான் தோற்றம் பெற்றன என்று எம்மில் பலர் எண்ணுகிறார்கள். அது மிகப் பெருந்தவறு. எமது புராணங்களிலும் இதிகாசங்களிலும் பெண்ணியம் பெருமையாக பேசப்படுகின்றமையை நாம் காண முடியும். இராமாயணமும், மகாபாரதமும் பெண்ணை பெருமைப்படுத்தும் வகையில் இரு பெரும் யுத்தங்களையே நடாத்தின. இராமாயணம் சீதையின் கற்பையும் மனவுறுதியையும் போற்றுகின்றது. மகாபாரதத்தில் திரௌபதிக்கு இழைத்த அவமானமே குருஷேத்திர யுத்தத்துக்கு அடிப்படையானது. ஒரு கட்டத்தில் திரௌபதி உறவினர்களுக்கு ஏற்படப்போகும் உயிரிழப்புக்கள் குறித்து கவலையடைகிறாள். அதனால் தன்னிமித்தம், தனக்கு நேர்ந்த அவமானம் நிமித்தம், இந்த போரை நடாத்த வேண்டாம் என்று கண்ணனை வேண்டிக்கேட்கின்றாள். அப்போ கண்ணன் கூறிய பதில் அவளை வாய் அடைக்கச் செய்கின்றது. 'இந்த யுத்தம் உன்னை மட்டும் கருத்தில் கொண்டு நிகழ்வதல்ல.... இந்த உலகத்தில் உள்ள எந்த ஒரு பெண்ணுக்கும் இப்படி ஒரு அவமானம் ஏற்பட்டால் எவ்வாறான ஒரு தண்டனை நியமிக்கப்படும் என்பதை வெளிக்காட்டவே இந்த யுத்தம் தீர்மானிக்கப்பட்டது'.

பாருங்கள், பெண்ணியம் பற்றி அதிகம் பேசப்படும் இந் நாட்களில் என்ன நடக்கின்றது? புதினப் பத்திரிகைகளையும் இணையத்தையும் திறந்தால் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளே செய்திகளாக வந்து எமது நெஞ்சை அதிர வைக்கின்றது. பெண் எனப்படுபவள் தாய். ஆண்களுக்கு கிடைக்கக்கூடிய அனைத்து உரிமைகளும் சுதந்திரமும் வாய்ப்புக்களும் அவளுக்கும் எட்ட வேண்டும். அவள் பலவீனமானவள் அல்ல. ஆண்கள் குழுக்களாக தனி ஒருத்தியை இரவு நேரத்தில், பேருந்தில் கொடுமைபடுத்துகின்றார்கள். பெண்கள் குழுக்களாக தனி ஒருவனை தண்டிக்க புறப்பட்டால் இந்த உலகமே தாங்காது என்பதை சகோதரர்களே நீங்கள் உணர வேண்டும். இயற்கையிலேயே பெண்ணிடம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய சிறந்த பண்புகள் உண்டு. அதே போல் அன்புக்கும் பாசத்துக்கும் கருணைக்கும் அவளே தலைவி! அவளது அந்த பண்புகள் பாராட்டப்பட வேண்டும். அநீதிகள் இனம் காணப்பட்டு அழித்தொழிக்கப்பட வேண்டும். அதுவே சமுதாய மேன்மைக்கு வழி காட்டும் என்பதுடன் நன்மார்க்கத்திலும் இட்டுச் செல்லும்!

அடுத்து 'சேவை மனப்பாங்கு' ஒருவனிடத்தில் இருக்குமேயானால் அவன் தெய்வத்துக்கு சமானமாவான். அன்னை தெரேசா தனது சேவையால் நோபல் பரிசினை பெற்றார். 'புளோரன்ஸ் நைட்டிங்கேல்' தனது சேவையால் நோயாளிகளுக்கு பரிகாரமும் ஆறுதலும் அளித்தார். இன்றும் அவரது சேவையை நினைவு கூறும் வகையில் எமது வைத்திய சாலைகளில் வெள்ளை நிற சீருடை அணிந்த தாதிமார் கடமையில் ஈடுபட்டிருப்பதையும் நோயாலும் வயோதிபத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளப்பரிய கடமைகளை செய்வதையும் காண்கின்றோம். அசுத்தம், நாற்றம் என்றெல்லாம் பாராமல் இப்படியான பணியில் ஈடுபடுவது வெறும் சம்பளத்துக்காக அல்லாமல் அவர்களது ஆழ்மனதில் அவர்களுக்கு இருந்திருக்கக் கூடிய பரிவு, பாசம், சேவை மனப்பான்மை ஆகியனவே அவர்களை இச்சேவைக்கு உந்தி தள்ளியிருக்கும்! நிச்சயமாக நீங்கள் கூட 'பொது நலத்தையும்', 'அஹிம்சையையும்', 'பெண்ணியத்தையும்', 'சேவை மனப்பான்மையையும்', விரும்புபவர்தான். ஆனால் நீங்கள், உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றீர்கள் என்பதுதான் கேள்வி!

ஊரில் எனக்கு உறவினரான அடாத்துக்கார பேர்வழி ஒருவர், எப்பேற்பட்ட கஷ்டமான விரதத்தையும் முயன்று அனுஷ்டிப்பார். பாறணை முடிந்து மறு நாளே ஆடு அடித்தல், கோழி வெட்டுதல் முதல் அனைத்து அட்டூழியங்களையும் கூச்சமின்றி செய்ய தொடங்கிவிடுவார். எப்பேற்பட்ட உலகம் என்று பாருங்கள்!

# தேசிய SMS செய்திகள்

- **கண்காணிப்பு கட்டமைப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன.**

ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கான கண்காணிப்பு கட்டமைப்புகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

- **சிகிரிய சுவரோவியத்துள் தன் பெயரை பொறிக்க முனைந்த மாணவி கைது**

சிகிரியா சுவரோவியத்தில் தனது பெயரை எழுத முயன்ற பாடசாலை மாணவி ஒருவர் சிகிரிய தொல்பொருள் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு பகுதி பாடசாலை ஒன்றில் உயர்தரம் கற்கும் மாணவியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

- **தனி கரையோர மாவட்டம் கோருவது இனவாத பிரவேசமாகும் - அநுர குமார**

தமக்கு எதிரான முஸ்லிம்களின் விரோதத்தை குறைப்பதற்காகவே மு.கா. தனி கரையோர மாவட்டத்தை கோருகிறது. இத்தகைய கோரிக்கையானது இனவாதத்தின் பிரவேசமாகும். எனவே நாட்டை பிளவுபடுத்தும் எந்தவொரு கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

- **ஐ.தே.க வேட்பாளர் ரணிலே - சஜித்**

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வின் தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நிறுத்த கட்சி தீர்மானித்திருப்பதாகவும் இந்த விடயம் தொடர்பாக எந்தவொரு வாதமும் இல்லையென்றும் ஐ.தே.க.பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

- **ஏ-9 வீதி வாகன வேக குறைப்பு**

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியில் குறிப்பாக மாங்குளத்திலிருந்து கிளிநொச்சிக்கு இடையில் வாகனங்களை விரைவாகச் செலுத்துவதை தவிர்த்துக்கொள்ளுமாறு வாகன சாரதிகளை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

- **தேசிய அடையாள அட்டை பெறாதவர்கள் உடன் பெற்றுக் கொள்ளவும்**

இதுவரை தேசிய அடையாள அட்டை பெறாத மாணவர்கள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இன்னும் 50,000 மாணவர்கள் தேசிய அடையாள அட்டை பெற வேண்டியுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

- **சிதைந்த தலையுடன் ஆண் சடலம் மீட்பு**

கடுகண்ணாவை பிரதேசத்தில் தலை முற்றாக சிதைந்த நிலையில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரது சடலம் கம்பளைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

- **இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான தே.அ.அட்டை**

தகாஸ்லந்தை மீரியபெத்த பகுதியில் இடம்பெயர்ந்த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக ஆட் பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

- **போராளிக் குழுவுடன் இணையவிருந்த மூவர் கைது**

சிரியாவின் போராளிக் குழுக்களுடன் இணைந்து கொள்ளும் நோக்கில் சென்ற மூன்று மாலைதீவுப் பிரஜைகள் இலங்கையில் வைத்து கைது செய்யப்பட்டு மாலைதீவுக்கே நாடு கடத்தப்பட்டுள்ளதாக மாலைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். 23 வயதான இரண்டு ஆண்களும் 18 வயதான பெண்ணுமே இவ்வாறு நாடு கடத்தப்பட்டதாக மாலைத்தீவு பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

- **துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதால் மாமனார் கைது**

கொள்ளுப்பிட்டி பகுதியில் பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 14 வயது மாணவி ஒருவர் அவரது மாமனாரால் வெள்ளவத்தை கடற்கரை பகுதியில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டபோது வெள்ளவத்தை பொலிஸாரினால் குறித்த மாமனார் கைது செய்யப்பட்டுள்ளார்.

- **2லட்சம் பெறுமதியான பூங்கன்றுகள் பறிமுதல்**

சரத் பொன்சேகா, கொஸ்லந்தை மீரியபெத்த பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவால் இடம்பெயர்ந்த மக்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் அம் மக்களுக்கு வழங்க உலர் உணவுப் பொருட்களை பொன்சேகா தரப்பினர் எடுத்துச் சென்றிருந்ததுடன் அவற்றை நேரில் விநியோகிக்க அதிகாரிகள் இடமளிக்கவில்லை.

# நிகழ்வுகள்

## சிரேஸ்ட பிரஜைகள் தின விழா

- மூதூர் நிரூபர் -

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் சிரேஸ்ர பிரஜைகள் தின நிகழ்வுகள் இடம்பெற்றது. இங்கு கிழக்கு மாகாண அமைச்சர் மன்சூர் மற்றும் எதிர்கட்சி தலைவர் சி. தண்டாயுதபாணி போன்றோர் கொடிகளை ஏற்றுவதனையும் சிரேஸ்ர பிரஜைகளுக்கு பிரமத செயலாளர் பரிசுப்பொருள் வழங்கி கௌரவிப்பதனையும் உயர் அதிகாரிகள் நகர சபைதலைவர் க. செல்வராசா போன்றோரையும் படங்களில் காண்க








## வாசிப்பு மாதத்தை ஒட்டி நிகழ்வு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கிவரும் பேத்தாழை பொதுநூலகத்தில் சிறுவர்களுக்கு கதைகூறும் நிகழ்விற்கு, இலங்கையின் கதைசொல்லிகளில் தலைசிறந்தவரும், இலங்கையில் வில்லிசையின் பிதாமகருமான மாஸ்டர் சிவலிங்கம் அவர்களை வரவழைத்து அவரைக் கௌரவித்து, எமது பிரதேசத்து சிறுவர்களுக்கும் அவரை அறிமுகப்படுத்துகின்ற நோக்கில் நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வுக்கு வாழைச்சேனை தமிழ் - கலை, இலக்கிய மன்றம் இணை அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாஸ்டர் சிவலிங்கம் அவர்களது பணியினை வாழ்த்தி 'மகுடம்' மன்றத்தின் உறுப்பினரும், ஆசிரியையுமான திருமதி.தவலெட்சுமி யோகேந்திரன் அவர்கின் வாழ்த்துப்பாவுடன், பொன்னாடை அணிவித்து சிறு அன்பளிப்பினையும் வழங்கி மாஸ்டர் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் மாபெரும் புத்தக கண்காட்சியும் இடம்பெற்றுள்ளது.

- கொலின் -







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 05

01. ஒரு குழுவிலுள்ள 10 மாணவர்கள் தங்களிடையே கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். ஒரு மாணவனுக்கு 12 வாழ்த்து மடல் கிடைத்தால், எத்தனை மாணவர்கள் வாழ்த்து மடல்களை பரிமாறிக் கொண்டனர்?
1. 11 2. 12 3. 13

02. வித்தை அகற்றிய பின், உணவாக சமைக்கும் காய்கறி வகை எது?
1. கத்தரிக்காய் 2. ஈரப்பலா 3. புடொல்

03. குரக்கன் போன்ற வித்தின் வடிவத்தையுடைய வித்து எது?
1. மிளகு 2. கடுகு 3. நோக்கல்

04. பித்தளைத் தட்டிற்கு அருகில் காந்தத் துண்டினை கொண்டு செல்லும் போது,
1. பித்தளை தகட்டை நோக்கி காந்தத் துண்டு இழுக்கப்படும்.
2. பித்தளை தகட்டுக்கும், காந்தத் துண்டுக்கும் இடையில் எதுவும் ஏற்படாது
3. பித்தளை தகட்டிலிருந்து காந்தத் துண்டு தள்ளப்படும்.

05. நன்றாக நிழல் தரும் தாவரம் எது?
1. ஆலமரம் 2. அசோக்மரம் 3. தென்னைமரம்

06. பின்வரும் பூக்களில் மாலை நேரத்தில் மலரும் பூ எது?
1. நந்தியாவட்டை 2. குவளை 3. பவள மல்லிகை

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் திகதி வியாழக்கிழமை ஆகம். இதற்கேற்ப 07, 08 இற்கு விடையளிக்கவும்.

07. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள புதன் கிழமைகளின் எண்ணிக்கையும், வியாழக்கிழமைகளின் எண்ணிக்கையும் முறையே
1. 4, 4 ஆகம் 2. 4, 5 ஆகம் 3. 5, 4 ஆகம்

08. 2009 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன.
1. 50 2. 52 3. 53

09. ஆற்றில் நீர் மணிக்கு 4 கிலோமீற்றர் வேகத்தில் பாய்கின்றது. மனிதன் ஒருவன் மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்தில் ஆற்றுநீர் ஓட்டத்திற்கு எதிராக நீந்துகின்றான். அவன் நீந்திச் செல்லும் உண்மையான வேகம் எவ்வளவு?
1. 2கி.மீ 2. 4கீ.மீ 3. 6கி.மீ

10. இலங்கையில் மட்டும் வாழும் இலங்கைக்குரிய பிராணி?
1. ஆட்காட்டி குரவி 2. சருகுமான்
3. பெலிக்கன்

11. சமையலறையில் இரவில் கரப்பான் பூச்சிகளின் நடமாட்டத்தை தடுக்கும் எளிய வழி எது?
1. மின்குமிழை ஒளிர விடல்
2. பொறியுணவை வைத்தல்
3. கையால் பிடித்து அழித்தல்

12. இரவு வேளையில் திரியும் பறவையாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1. ஆந்தை 2. மீன்கொத்தி 3. மரங்கொத்தி

13. பருகுவதற்கு பால் பக்கற்றை திறப்பதற்கு முன் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது?
1. காலாவதியாகும் தினம்
2. உற்பத்தி செய்த தினம்
3. உள்ளடக்கப்பட்ட பாலின் அளவு
4. மருந்தின் விலை

14. நெத்தலிக் கருவாட்டை உண்பதால் உடலுக்கு கிடைக்கும் போசணைப்பொருள்
1. புரதம் 2. கொழுப்பு 3. விற்றமின் ஏ 4. கல்சியம்

15. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம்
1. அயடீன் குறைபாடு 2. விற்றமின் குறைபாடு
3. இரும்புச்சத்து குறைபாடு
4. கல்சியம் குறைபாடு

## சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

பேசவேண்டிய நேரத்தில்
அமைதியாக இருந்து விட்டால்:
அமைதியாக இருக்கும் நேரத்தில்
நிம்மதியாக இருக்க முடியாது!!

## வித்தியாசமான உதவி

### குட்டிக்கதை

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது. தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.



பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் ........" என்று எச்சரித்தான். பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான். பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்

– பயத்திலும் யோசித்து செயல்படல் வேண்டும் –



செல்வி.வீ.கிஷோபிக்கா,
திருகோணமலை

## நல்லதா?

குறள் படிப்பமே - திருக்
குறள் படிப்பமே!
அறம் விளக்குமே - உண்மை
அன்பு காட்டுமே!

வாழ்வு சொல்லுமே - வாழ்வின்
பேறு சொல்லுமே!
ஆழ் பொருள் தரும் - நல்
அடக்கமும் தரும்!

நன்றி காட்டுமே - நடு
நிலைமை காட்டுமே!
என்றுமே மெய்ப்பொருள் - கண்(டு)
ஏற்கச் சொல்லுமே!

விருந்து மட்டுமோ - வேறு
பலவும் சொல்லியே,
மருந்தும் சொல்லிடும் - குறளை
மறத்தல் நல்லதா?

[illegible]
([illegible]யா)

# குறுக்கெழுத்து புதிர் 034

முடிவுத் திகதி : 12.11.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 22 | 2 | | | | 3 | | 23 |
| | 4 ம | | | | | ங் | 5 | ரா |
| | | 6 | | 24 | ■ | 7 | | |
| 8 | | 9 | 25 | | ■ | 10 | | ய |
| 30 ம் | | | 11 | லி | ■ | 12 | 26 கை | |
| | ■ | 13 | 27 | | | ■ | | |
| | ■ | 14 | ல | | 15 | | ■ | ■ |
| 28 | 16 | | | 17 | | 18 | 29 | |
| 19 | த | 20 | | | 21 | பு | | |

### இடமிருந்து வலமாக

1. நாரதர் செய்யும் இதனால் நன்மை உண்டாகும்.
2. இராமாயணத்தை மாற்றங்களுடன் திருப்பித் தந்தவர்
3. பூப்போல இருக்கும் உணவுவகை, பதம் பிழைத்தால் கல் போலாகிவிடும் - குழம்பியுள்ளது.
4. அண்மையில் கொடுமையான அனர்த்தம் இலங்கையில் இதனால் ஏற்பட்டது.
5. சைவர்களின் தலையெழுத்தை இதுவம் நிர்ணயிப்பதாக நம்புகினறனர். திரும்பியுள்ளது.
6. மூன்றெழுத்து அற்புதமான அன்பு
7. காட்டு ராஜா வசிக்குமிடம்
8. இலங்கையிலுள்ள ஓர் இடம் - குழம்பியுள்ளது
9. வேலையை இவ்வாறும் அழைப்பர்.
10. ஒருவர் போல் இன்னொருவர் இருத்தலை ஒரே ....... எனக்கூறலாம். - குழம்பியுள்ளது.
11. ஆபரணங்களில் பெண்ணுக்கு மிக முக்கியமானது
12. அதிகம் என்பதன் ஒத்த பொருள் சொல்
13. இது எடுப்பதற்காக உயிர்பலி கூட கொடுப்பர்.
14. இந்துசமுத்திரத்தின் முத்து
15. எவ்வளவு பெரியவராக இருந்தாலும் கைதாகினால் இவரும் ...........
16. வடிவேலு பார்த்தீபன் நகைச்சுவைகளில் இது அதிகமாகக் காணப்படும்.
17. தமிழ்ப் பெண்களின் பாரம்பரிய ஆடை
18. ஒவ்வொரு வருட பிறந்தநாளின் போதும் ஒரு இது கூடுகிறது - குழம்பியுள்ளது.
19. மழையில் நனைவதால் இது ஏற்படும். - குழம்பியுள்ளது
20. இதனை அளிக்கத் தெரிந்தவர்கள் பெரியவர்கள். அறு சுவைகளுள் ஒன்று - குழம்பியுள்ளது.

### மேலிருந்து கீழாக

1. கட்டவிழ்ந்து திரிபவர்களுக்கு இது இடவேண்டும்.
22. அமங்கலத்தின் எதிர்ச்சொல் - குழம்பியுள்ளது.
2. கூர்ந்து அவதானிப்பு - ஒத்த சொல்
3. பிரபல இந்திய இயக்குனர்களுள் ஒருவர்
23. மகா காவியங்களுள் பெண்ணைப்புகழும் ஒன்று
24. ஊர்ந்து செல்லக்கூடிய, பாதுகாப்பிற்காக வாலை கழற்றிச் செல்லக்கூடியது - குழம்பியுள்ளது.
25. ஆர்ப்பாட்டங்களின் போது கைகளில் ஏந்திக்கொள்வது.
30. இரு பக்கங்களைகட கொண்டது
26. இந்தியாவும் பாகிஸ்தானும் .......... நாடுகளாகும். - கீழிருந்து மேல்
27. கை, கால் நோவுக்கு பூசப்படுவது
28. ஜோசியங்களுள் மிகச் சரியாக கூறக்கூடியது இவ் ஜோசியமாகும்.
29. மகிழ்ச்சியை குறிக்கும் ஈரெழுத்து சொல்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழுங்கப்படும்.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :**
**மலைமுரசு. இல - 159ஏ,**
**கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.**

## புதிர் 033 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | றா | 2 வ | 3 ளி | 23 ப | ம் | 4 க | 24 ம | ம் |
| 5 தா | ண் | ட | வ | ம் | ■ | 6 டி | ண் | 25 க |
| ட் | 7 அ | ம் | பு | ■ | ■ | த | ச | ச் |
| 8 ட | ஆ | ர் | ப் | 26 பா | ட் | 27 ம் | 9 ரி | சே |
| 10 ம் | ல | 28 கி | 11 அ | வை | 12 ம | ர | வு | ரி |
| ■ | ■ | ல் | ■ | ■ | கு | 13 நே | ரு | ■ |
| 14 ம | ல் | லி | 15 கை | க் | 16 ணி | த | க | 29 ம் |
| 17 அ | ம் | பி | கா | ப | 18 தி | ம் | 30 மோ | ர |
| 19 கோ | ச் | ச | டை | 20 யா | ன் | 21 கா | 22 ர் | தா |

## பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

திருமதி. ஸ்ரீ. செல்வி
32, மத்தியவீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. மாலாவிடம் 5ரூபாய் நாணயங்களாகவும் 2ரூபா நாணயங்களாகவும் ரூபா50 உள்ளது. 5 ரூபா நாணயங்களின் எண்ணிக்கை 2 ரூபா நாணயங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 3 இனால் கூடியது. 5 ரூ நாணயங்களின் எண்ணிக்கையை x எனவும் 2 ரூபா நணயங்களை y எனவும் கொண்டு ஒருங்கமை சமன்பாடு ஒன்றை உருவாக்குக.

அ. அச்சமன்பாட்டு சோடியை தீர்த்து மாலாவிடம் உள்ள 5 ரூபா மற்றும் 2 ரூபா நாணயங்களின் எண்ணிக்கைகளை காண்க.

ஆ. மாலாவிடம் உள்ள 5 ரூபா நாணயங்களின் எண்ணிக்கையின் 2 மடங்கான 10 ரூபா நாணயக்குற்றிகள் அவளிடம் கிடைத்தால், இப்போது அவளிடம் உள்ள பணம் எவ்வளவு?

2. ஒரு மனிதன் ஒவ்வொரு மாதமும் அதற்கு முதல் மாதம் அவன் சேமித்த தொகையை விட ரூபா 10 அதிகமாக சேகரிக்கிறான். முதலாவது மாதம் முடிவில் அவன் சேமித்த பணம் ரூபா7 ஆகம். அவன் சேமித்துள்ள முழுத்தொகை ரூபா 2040 ஆக எடுக்கும் காலம் n என்க.

அ. முதல் மூன்று மாதங்களில் சேமித்த தொகையைக் காண்க.

ஆ. ரூபா 2,040 ஐ சேமிக்க எடுக்கும் காலம் $5n^2 - 2n - 2040 = 0$ எனும் சமன்பாட்டிலிருந்து பெறப்படலாம் எனக் காட்டுக.

இ. மேற்கூறிய சமன்பாட்டிலிருந்து அம்முழுத்தொகையை சேமிக்க எடுக்கும் காலத்தை காண்க.

3. ஆண்டுதோறும் 15சதவீத பங்குலாபத்தைக் கொடுக்கும் சரத் கம். எனும் நிறுவனத்தின் ரூபா 10 பங்குகளை ரூபா 18 வீதம் கொள்வனவு செய்யலாம்.

அ. இக்கம்பனிகளின் பங்குகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 54,000 ஐ முதலீடு செய்யும் ராகுல் கொள்வனவு செய்யத்தக்க பங்குகளின் எண்ணிக்கை யாது?

ஆ. அவர் கொள்வனவு செய்த பங்குகளின் பெயர்மாத்திரையின் பெறுமானம் யாது?

இ. ஓர் ஆண்டின் இறுதியில் அவருக்கு கிடைக்கும் வருமானம் யாது?

ஈ. அவர் பெற்ற வருமானத்தை முதலீட்டின் சதவீதமாக காட்டுக.

உ. ஆண்டுதோறும் r சதவீத பங்குலாபத்தை கொடுக்கும் ஒரு கம்பனியின் ரூபா 20 பங்குகளை q வீதம் கொள்வனவு செய்வதற்கு ரூபா p யை முதலீடு செய்யும் ஒருவருக்கு ஆண்டின் இறுதியில் கிடைக்கும் பங்குலாபம் ரூபா a எனின், a இற்கான சூத்திரத்தினை p, q, r ஆகியவற்றின் சார்பில் எழுதுக.

4. நேர்கோடொன்று வட்டமொன்றை தொடும் எனின், தொடுபுள்ளியில் வரையப்பட்ட நாணுக்கும் தொடலிக்கும் இடையிலுள்ள கோணம் ஒன்றுவிட்ட வட்டத்துண்ட கோணத்திற்கு சமன் என நிறுவுக.

ஆ. முக்கோணம் DEF ஆனது அதன் உச்சிகள் ஒரு வட்டத்தின் பருதியில் அமையுமாறு உள்ளது. ஒரு கூர்ங்கோண முக்கோணி EG, FH என்பன குத்துயரங்களாகும். D யினூடாக வட்டத்துக்கு வரையப்பட்ட தொடலியானது நீட்டப்பட்ட FH ஐ J இல் சந்திக்கிறது.

அ. கோணம் DHG = கோணம் GEF எனவும்

ஆ. JD // HG எனவும்

இ. EF. HD = JD. GF எனவும் நிறுவுக.

திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953
23. Sivan st Trinco.

## பாடம் : விஞ்ஞானம்

01. ஒரு நீர்க் கரைசல் $H^+$ அயன்களை விடுவிக்கும் ஆற்றலின் ஏறுவரிசைக்கு நான்கு சேர்வைகள் பின்வருமாறு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

$NaOH < NH_3 < CH_3COOH < HCl$

அச்சேர்வைகளின் எவ்வியல்பு இதற்கு எதிரான விதத்தில் மாறுகின்றது.

அ. உலோகங்களை அரிக்கும் ஆற்றல்
ஆ. ஆவிப்பரப்புத் தன்மை இ. அமிலத்திறன் ஈ. மூலத்திறன்

02. மனிதனின் பிரதான நைதரசன் கழிவுப்பொருள் ஆகிய யூரியாவும் யூரிக் அமிலமும் உற்பத்தி செய்யப்படுவது

அ. சிறுநீரகத்தினுள்ளே ஆ. ஈரலினுள்ளே
இ. சதைஜினினுள்ளே ஈ. சிறுநீரகத்தியினுள்ளே

03. யாதாயினும் ஒரு பொறியின் பொறிமுறை நயத்தைக் கூட்டுவதற்கு செய்யவேண்டியது யாது?

அ. சுமை எதுவாக இருப்பினும் தெத்தனைப்புயத்தின் நீளத்தைக் கூட்டுதல்
ஆ. சுமைப்புயம் எத்தனப்புயத்திலும் பார்க்க நீளம் கூடியதாக இருத்தல்.
இ. சுமை தொடர்பாக எத்தனம் சிறியதாக இருத்தல்.
ஈ. பொறிவகை அறியப்படாமையால் ஒன்று கூறமுடியாது

04. வலையுறு நரம்பமைப்பு உள்ள இலைகளைக் கொண்ட தாவரத்தில் காணத்தக்க வேறோர் உருவ இயல்பு யாது

அ. கிளை கொள்ளாத தண்டுகள் இருத்தல்
ஆ. ஆணிவேர் தொகுதி இருத்தல்
இ. முப்பாத்து அமைப்புள்ள பூக்கள் இருத்தல்
ஈ. வித்தினுள்ளே ஒரு வித்திலை மாத்திரம் இருத்தல்

05. கயிற்றினாலான புறவன்கூட்டைக் கொண்டு காணப்படும் விலங்குக்கூட்டம் யாது?

அ. ஆத்திரப்போடா ஆ. அனலிடா இ. மொனஸ்கா ஈ. கோடோற்றா

06. பிழையான கூற்றை தெரிவு செய்க.

அ. எளிய மின்கலத்தில் செப்புக் கோலின் மீது ஐதரசன் குளிர் படிதல் முனைவாக்கம் எனப்படும்.

ஆ. எளிய மின்கலத்தில் முனைவகற்றும் கருவியாக செப்புசல்வேற்று பயன்படுத்தப்படுகிறது.

இ. நாகத்தகடானது சிறிதளவு அரிப்புக்குள்ளாகி ஐதரசன் குமிழ்கள் உருவாகும் தோற்றப்பாடு இடைத்தாக்கம் எனப்படும்.

ஈ. எளிய வோல்ற்றாக் கலத்தில் முனைவாக்கம், இடைத்தாக்கம் என்பன அநுகூலமான தாக்கங்களாகும்.

07. ஒரு மூலகத்தின் திணிவெண் 36 ஆகம். அதன் கருவிலுள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கை 19 ஆகம். இம்மூலகம்,

அ. ஒரு வலுவளவுள்ள அல்லுலோகம் ஆ. இரு வலுவளவுள்ள அல்லுலோகம்
இ. ஒரு வலுவளவுள்ள உலோகம் ஈ. சடத்துவவாயு

08. செம்பு (Cu), இரும்பு (Fe), சோடியம் (Na), அலுமினியம் (Al) ஆகிய உலோகங்கள் வளியில் அடங்கியுள்ள ஒட்சிசனுடன் தாக்கம் புரியும் வீதம் குறைந்து செல்லும் ஒழுங்கைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?

1. Al, Na, Fe, Cu 2. Na, Al, Fe, Cu 3. Al, Na, Cu, Fe 4. Na, Al, Cu, Fe

## பாடம் : வரலாறு

01. மின்னேரியா, கந்தளாய் குளங்களுக்கு நீரை வழங்கும் கால்வாய்

1. பப்பதந்த கால்வாய் 2. எலகர கால்வாய்
3. அங்கமட்டில கால்வாய் 4. மினிப்பேகால்வாய்

02. இலங்கையின் நீர்வள நாகரிக காலத்தில் றுஹுணு பிரதேச ஆட்சியாளன்

1. ஏப்பா 2. மாபா 3. இஸிகிரி 4. கமிக

03. குப்பிகல திஸ்ஸ தேரருக்கு தானமாக வழங்க வலகம்மா மன்னனால் பூசிக்கப்பட்ட ஆராமை

1. ஜேத்தவனராமய 2. அபயகிரி
3. ருவன்வெலிசாய 4. ரண்கொத்

04. இந்தியாவின் குலசேகர பாண்டிய மன்னனின் ஆக்கிரமிப்புக்கு ஆளான யாப்பகூவ ஆட்சியாளன்

1. 2ம் பராக்கிரமபாகு 2. 3ம் பராக்கிரமபாகு
3. 1ம் புவனேகபாகு 4. 1ம் விஜயபாகு

05. இலங்கையை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த இறுதி ஆட்சியாளன்

1. 6ம் பராக்கிரமபாகு 2. 1ம் பராக்கிரமபாகு
3. 1ம் விமலதர்மசூரியன் 4. 1ம் விஜயபாகு

06. அலெக்சாண்டரின் பிரதிபிம்பம் என கூறிய கல்ஜி வம்ச ஆட்சியாளன்

1. ஜலாலுத்தீன் 2. பிரோஷ் கல்ஜி
3. அலாவுதீன்கல்ஜி 4. முபாரக்ஷா

07. இலங்கையின் கலைச்செல்வாக்கை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட விகாரை

1. போரோபுதூர் 2. அங்கோர்வாட்
3. பலென்கே 4. பர்மியசம்பி

08. கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே சிலுவைப் போர் ஏற்பட காரணமான நகரம்

1. அலெக்சாந்திரியா 2. ஜெருசலம்
3. கொன்ஸ்தாந்துநோபிள் 4. ஜெனேவா

09. நாடுகாண் பயணத்திற்கு கீழைத்தேசத்துக்கு வருகை தந்த முதல் ஐரோப்பியர்

1. ஸ்பானியர் 2. பிரித்தானியர்
3. ஒல்லாந்தர் 4. பிரான்ஸியர்

10. ஐரோப்பாவில் தோன்றிய முதல் தேசிய அரசு

1. ஸ்பானியா 2. போர்த்துக்கல்
3. இத்தாலி 4. ஜேர்மனி

11. புரட்டஸ்தாந்து மதத்தின் மத்திய நிலையம்

1. ஜெனீவா 2. புளொரன்ஸ்
3. பாரீஸ் 4. லிஸ்பன்

12. சர்வதேச நீதிமன்றம் அமையப் பெற்ற நாடு

1. அமெரிக்கா 2. பிரான்ஸ்
3. ஜேர்மனி 4. நெதர்லாந்து

13. ஆலண்ட தீவு தொடர்பாக முரண்பட்ட நாடுகள்

1. ஈராக் - குவைத் 2. கிரீஸ் - பல்கேரியா
3. சுவீடன் - நோர்வே 4. சுவீடன் - பின்லாந்து

ஆசிரியர் : அகிலன்

## Grammar

Ex 01: Which form of the verb is correct in these sentences?

1. Ann isn't free on Saturday. (She'll work / She's working)
2. (I'll go / I'm going) to a party tomorrow night. Would you like to come too?
3. I think Jane (will get / is getting) the job. She has a lot of experience.
4. A - Have you decided where to go for your holidays?
B - Yes, (we will go / we are going) to Italy.
5. I can't meet this evening. A friend of mine (will come / is coming) to see me.
6. There's no need to be afraid of the dog. (It won't hurt / It isn't hurting) you.

Ex 02: Complete the sentences using ***can*** or ***(be) able to***.

1. George has traveled a lot. He .................. speak four languages.
2. I haven't ................ sleep very well recently.
3. Sandra .................. drive but she hasn't got a car.
4. I can't understand Martin. I've never ............ understand him.
5. I used to ...................... stand on my head but I can't do it now.
6. I can't see you on Friday but I .................... meet you on Saturday morning.
7. Ask Catharine about your problem. She might ................. help you.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில்...

கூட்டமைப்பின் தேவைகளுக்கு அமையவே இருக்கின்றதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். அதனையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் கோருவது ஈழம் அல்ல என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் தெரிவித்துள்ளார். அத்துடன் பொத்துவிலில் இருந்து சம்மாந்துறை, சாய்ந்தமருது வரையான பிரதேசங்களில் உள்ள மீனவர்களுக்கு தனியான நிர்வாகம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் வழங்கிய உறுதிமொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என ரஜாப்தீன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மேலும் ஸ்திரமின்மையை உருவாக்கும் என்பதால், முஸ்லிம்களை கொண்ட தனியான நிர்வாக மாவட்டத்தை ஏற்படுத்த இணங்க போவதில்லை என அரசாங்கம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் டி. எம் ஜயரத்ன, இலங்கையில் வாழும் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் நாட்டில் ஐக்கியமானவே வாழ விருப்புவதாகவும் நாட்டை பிளவுபடுத்தி வாழ விரும்பவில்லை எனவும் கூறியுள்ளார்.

கிழக்கில் மாத்திரமல்ல மத்திய மாகாணத்திலும் பெரும்பாலான முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். நாட்டை பிளவுப்படுத்த சென்றால், அது நாட்டிற்குள் பதட்டமான சூழ்நிலைகளை உருவாக்கும் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்களின் ஆதரவை அரசாங்கத்திற்கு பெற்றுக்கொடுக்க நிபந்தனையாக கல்முனை மாவட்டத்தை தனியான முஸ்லிம் நிர்வாக மாவட்டமாக ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை கடுமையாக நிராகரிப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நாட்டின் மாவட்டங்களை இவ்வாறு இன ரீதியாகவும், மத அடிப்படையிலும் பிரித்து வேறுப்படுத்தும் யோசனைகளை கண்டிப்பதாக அந்த கட்சியின் ஊடகப் பேச்சாளரான மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த ஹசன் அலி கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை ஒன்றிணைத்து தனியான நிர்வாக மாவட்டமொன்றை உருவாக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையில் பிழையில்லை தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் அம்பாறையும் மட்டக்களப்பும் ஒரே மாவட்டமாகவே காணப்பட்டது. 1961ம் ஆண்டு அம்பாறை தனியான மாவட்டமாக பிரிக்கப்பட்டதன் மூல் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசமாக மாறியது. அன்று முதல் இன்று வரையில் புதிய நிர்வாக மாவட்டமொன்றை உருவாக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை. அம்பாறை மாவட்டத்தில் 74 வீதமானவர்கள் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும் இதுவரையில் தமிழ் பேசும் ஒருவர் அரசாங்க அதிபராக நியமிக்கப்படவில்லை.

சிங்களவர்களே அரசாங்க அதிபர்களாக கடமையாற்றி வருகின்றனர். இந்த கோரிக்கையை முஸ்லிம் ஒருவர் முன்வைத்த காரணத்தினால் நாட்டை பிளவுபடுத்த முயற்சிப்பதாக சிலர் பிழையான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார் அவர்..

இதனையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் தனியான நிர்வாக பிராந்தியத்தை கோருவது பாரதூரமான பிரச்சினை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் மூன்றாம் முறை வாசிப்பின் ஆரம்ப விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எனினும் அரசியல் கட்சிகள் பலவும் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக் கூறி வருகின்ற வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்விடயம் தொடர்பாக எதுவித கருத்துக்களையும் தற்போது வரை முன்வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

## படுகாடு மக்களின்....

காணிக்கச்சேரியிலேயே இவ்வெதிர்ப்பை மக்கள் வெளியிட்டதாக மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

1958-60 காலப் பகுதியில் பட்டித்திடல், மணற்சேனை, பெருவெளி, மல்லிகைத்தீவு, மேன்கமம், கிளிவெட்டி, கங்குவேலி மற்றும் மூதூர் கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் பயிர்ச் செய்கைக்காகப் பண்படுத்திப் பயன்படுத்திய காணியில் 2009ம் ஆண்டுக்குப் பின் பயிர்செய்கையில் ஈடுபட முனைந்த போதே பிணக்குகள் உருவாகியுள்ளன.

மண்டலபுர பிக்கு , அவரது சகோதரர், சகோதரரின் பிள்ளைகள் எனச் சிலர் அக்காணிகளைத் தம்முடையது என உரிமை கோரியிருப்பதுடன் அவற்றில் தமிழ் மக்கள் பயிர் செய்வதையும் தடுத்து வருகின்றனர் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகக் கூட்டப்பட்ட காணிக்கச்சேரியில் காணி அனுமதிப்பத்திரம் கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு தலா ஒன்றரை ஏக்கர் காணி மட்டுமே பிரித்துத் தரப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அதனைக் கடுமையாக மக்கள் எதிர்த்த போது சேருவிலைப் பிரதேச செயலாளரால் மற்றொரு இடத்தில் சிங்கள மக்களுக்கு காணி வழங்கப்படும் எனத் தெரிவித்த போதும் அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என மலைமுரசிற்கு மக்கள் தெரிவித்துள்ளனர்.

சரியான தீர்வொன்று வரும்வரை அக் காணிகளில் பயிர்ச் செய்கையை எவரும் மேற்கொள்ளக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

## கிழக்கு மாகாண விருதுகள்..

சடாட்சரன்- கல்முனை- கவிதை, திரு.சி.வி.பி.மாணிக்கம்- திருக்கோவில்- கவிதை ஆகியோரும் 2014 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் வெளிவந்த சிறந்த நூல்களாக தெரிவு செய்யப்பட்ட நூல்களின் விருதுகளுக்கு சிறுகதை:- என்னடா கொலமும் கோத்திரமும் - எஸ்.முத்துராமன், கவிதை மண்ணிற் புதைந்த வரலாறு – முல்லை வீரக்குட்டி, எல்லாள காவியம் - ஜின்னா ஷரிபுத்தீன், விமர்சனம் கல்விச்சமூகம் எதிர்பார்ப்பும் வகிபங்கும் ஏ.எல்.நௌபீர், பல்துறை ஆளமை மிக்க மாணவன் ஆரோக்கியமான கற்றலை நோக்கி – அஸ்ஷெய்க் எம்.எச்.வஹாப் திருகோணமலை மாவட்ட கிராமியப் பாடல்கள் - ச.அருளானந்தம், ஆய்வு:- சிலம்பு கூறலும் கண்ணகி வழக்குரையும் - ஒப்பாய்வு- ஆறுமுகம் அரசரெத்தினம், சம்பூர் பிரதேசத்தின் தொன்மை- அருமைநாதன் ஸதீஸ்குமார், உயர்கல்வி பிறப்புரிமையியல்- சுபாலினி இளங்கோ, சிறுவர் இலக்கியம் பளிங்கு மாளிகை – முகில்வண்ணன் (வே.சண்முகநாதன்) ஆகிய படைப்புக்களும் தேர்வாகியுள்ளன.

## கிழக்கின் உதயத்தில்...

மில்லியன், வவுணதீவிற்கு 1.1 மில்லியன், பட்டிப்பளைக்கு 0.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை 74 வீதமான மக்கள் தமிழர்களாக உள்ள போதும் அவர்களுக்கு உரிய நிதி ஒதுக்கப்படவில்லை.

அதனிலும் குறிப்பாக மண்முனைப்பற்று பிரதேசத்தில் 25490 தமிழ் மக்களுக்கு எவ்வித நிதியும் ஒதுக்கப்படாமல் 8400 முஸ்லிம் மக்களுக்கு மட்டும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கௌரவ அமைச்சர் பஷீர் சேகுதாவுத் மட்டுமே தமழ் மக்கள் வாழும் பிரதேசத்திற்குச் சிறுதொகை நிதியை ஒதுக்கியுள்ளார். அதற்கு இச்சபையில் வைத்து அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன் எனத் தெரிவித்துள்ள யோகேஸ்வரன் இவ்வாறான அபிவிருத்திப் போக்கில் இழைக்கப்படும் பாரபட்சத்தைத் தனது உரையில் தெளிவாகக் காட்டியுள்ளார்.

## கிழக்கு மாகாண தமிழர் ...

சங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையினை மலைமுரசு பிரசுரித்தையிட்டு தமது கடும் விசனத்தையும் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் இயங்கும் அமைப்பால் வெளியிடப்பட்ட அச் செய்திக்குறிப்பில் எவ்வித உண்மையும் இல்லை எனத் தெரிவித்துள்ள தமிழர் ஆசிரியர் சங்கம் தமது சங்கமானது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்ட விரோதமான முறையில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதில்லை என்றும் ஒவ்வொரு அங்கத்தவர்களையும் இணைக்கும் பொழுது அவர்களது விருப்பு ஒப்புதல் கையெழுத்துடனேயே தமது சங்கத்தில் இணைப்பதாகவும் தெரிவித்துள்ளது.

## வீதித் தொழிலாளிகள்...

வழங்கியிருப்பதாக நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள வீதி மற்றும் சுகாதாரத் தொழிலாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மாகாண ஆளுனரால் அனுமதிக்கப்பட்ட ஆளணி நியமனங்களுக்கு அமைய வீதி மற்றும் சுகாதாரத் தொழிலாளிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் உண்மையிலேயே வீதியிலும் சுகாதாரப் பணிகளிலும் ஈடுபடும் தொழிலாளிகளின் சேவை மூப்பின் அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். துப்புரவுத் தொழிலாளிகளின் நியமனத்திற்கான உச்ச கல்வி வரையறை எட்டாம் வகுப்பு என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் சேவை மூப்பையும் இவ் உச்சக் கல்வித் தகைமையையும் கொண்ட வீதித் தொழிலாளிகளுக்கு நியமனம் வழங்கப்படாமல் உள்ளூராட்சி சபைகளின் அலுவலகங்களில் வேலை செய்யும் பலருக்கு இந்த நிமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவாம்.

இவ்வாறு வீதி மற்றும் சுகாதாரத் தொழிலாளிகளின் நியமனங்களைப் பெற்றுக் கொண்ட பலர் அவர்களுடைய சேவைக்காலத்தில் எப்போதுமே வீதியில் சேவை செய்யாதவர்கள் என தகவல் அறிந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் மலைமுரசின் “மக்கள் குறைகேள் அலுவலகத்திற்கு” தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளருக்கு நியாயம் கிடைப்பதை உறுதி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## இளம் தாயின்...

இதனையடுத்து காவல்தறை மீண்டும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சாட்சிகளின் வாக்கு மூலங்களையும் மீண்டும் பதியும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

## இலங்கைத் தமிழர்...

இடர்ப்பாடுகளை உடனடியாக தீர்த்துவைக்குமாறு சங்கத்தின் உயர்மட்டக்குழுவினர் கேட்டுக் கொண்டனர். அத்தோடு பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள பாடரீதியிலான ஆசிரிய வெற்றிடங்களை ஆசிரிய சமப்படுத்தல்மூலம் தீர்த்து வைக்கவேண்டும் என சங்கம் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வலயக் கல்விப்பணிப்பாளர் அவற்றை உடனடியாக தமக்கு முன்னிலைப் படுத்தினால் அடுத்த தவணை ஆரம்பத்தில் அதற்கான உரிய வழிமுறைகள் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

இதைவிட அதிபர்கள், ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சனைகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒழுங்குபடுத்துகின்ற நடமாடும் தீர்வுத் திட்டத்தில் தாமும் அதிகாரிகளுடன் கலந்துகொண்டு அவ்விடத்திலேயே அதற்கான தீர்வுகளை வழங்குவதற்கும் ஒப்புதல் வழங்கியுள்ளார். அதிபர்கள், ஆசிரியர்கள் தமக்குள்ள குறைகளை பாடசாலைகளின் இணைப்பாளர்களுக்கூடாக மாவட்டச் செயலாளருக்கோ அன்றி நிர்வாகச் செயலாளருக்கோ அன்றி பொதுச் செயலாளருக்கோ அவற்றை முன்னிலைப்படுத்தி தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் கே.நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நம்பிக்கை

## நபித்தோழர்கள் நம்பிக்கை கொண்டது போல் நம்பிக்கை கொள்வதே சிறந்த முறையாகும்



முஸ்லிம்கள் நபி(ச) அவர்களைப் பின்பற்றுகின்ற காரணத்தினால் அவருக்கு முன்னர் அனுப்பப்பட்ட ஈஸா (இயேசு), மூஸா (மோஸஸ்) போன்ற எந்தவொரு இறைத் தூதர்களையும் நிராகரிக்கவோ அல்லது குறைத்து மதிப்பிடவோ கூடாது. எல்லா இறைத்தூதர்களையும் ஒன்று போல் ஏற்று அவர்களுக்குரிய மரியாதையினை வழங்குவதோடு அவர்கள் மீது சுமத்தப்படும் களங்கங்களைக் களைவதும் முஸ்லிம்களின் கடமையாகும்.

**கடந்தவாற தொடர்ச்சி .. ..**

அர்கானுல் ஈமான் எனும் ஈமானின் ஆறு அடிப்படைகளில் ரஸூல்மார்கள் பற்றிய நம்பிக்கையும் உள்ளடங்குகின்றது. இந்நம்பிக்கை எவ்வாறு அமைய வேண்டும் இஸ்லாம் விரும்புகின்ற நடுநிலைத் தன்மையும், சகிப்புத் தன்மையும் கொண்டதாக இந்நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வது எவ்வாறு என்பது பற்றிய தெளிவினை நாம் விளக்கத்திற்காக எடுத்துக் கொண்டுள்ள சூறதுல் பகராவின் 2:136, 2:285 ஆகிய வசனங்கள் எமக்குத் தருகின்றன.

முஹர்ரம் மாதம் 10 ஆம் நாள், மூஸா நபி பிர்அவ்னின் பிடியில் இருந்து தப்பிய நாள். அவனும் அவனது அகங்காரமும் சரிந்த நாள் என்பதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துமுகமாக இன்று வரை அந்நாளில் முஸ்லிம்கள் நோன்பு நோற்று வருகின்றனர். மூஸா நபியினை யூதர்களின் தீர்க்கதரிசி என்று முஸ்லிம்கள் பார்ப்பதில்லை. நபி(ச) அவர்கள் கூட நபிமார்களின் தாய்மார் வேறுபட்டிருந்தாலும் அவர்கள் அனைவரும் சகோதரர்கள் என்று கூறியமையால், இறைவனால் அனுப்பப்பட்ட அனைத்துத் தீர்க்கதரிசிகளையும் (இறைத்தூதர்களையும்) ஏற்றுக் கொள்வதுதான் இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைக் கோட்பாட்டில் உள்ள "அல் ஈமானு பிர்ருஸுல்" பற்றிய சரியான நிலைப்பாடாக அமையும்.

"இத்தூதர்களில் சிலரை விட சிலரை நாம் சிறப்பாக்கி வைத்திருக்கின்றோம். அவர்களில் (நேரடியாக) அல்லாஹ் பேசியவர்களுமுள்ளனர். மேலும் அவர்களில் சிலரின் பதவிகளை அவன் உயர்த்தினான். மர்யமின் மகன் ஈஸாவுக்கு நாம் தெளிவான சான்றுகளை வழங்கி, "ரூஹுல் குத்ஸ்" (எனும் ஜிப்ரீல்) மூலம் அவரை வலுவூட்டினோம்." (2:253)

இந்த வசனத்தில் இறைத்தூதர்களில் சிலரை சில விடயங்களில் அல்லாஹ் சிறப்பித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

தொடரும் .. ..




# வாரமொரு ஜோக்

- அருணன் -

ஒரு பிரபலமான பெண் நோயியல் மகப்பேற்று நிபுணரிடம் சிகிச்சை பெற வந்திருந்த அந்த அழகான பெண் தனக்கு ஏற்பட்டுள்ள நோயை விளக்கமாக கூறியதை கவனமாக செவிமடுத்த அம்மகப்பேற்று நிபுணர் அவரின் உடலை முழுமையாக பரிசோதிக்க வேண்டியிருப்பதனால் அடுத்த அறைக்குள் சென்று உடைகளை அகற்றிவிட்டு கட்டிலில் படுத்துக்கொள்ளுங்கள் நான் சற்று நேரத்தில் வந்துவிடுகின்றேன் என கூறிவிட்டு அடுத்த நோயாளியை பார்வையிட தொடங்கினார்.

பெண்மணியும் அவ்வாறே அறைக்குள் சென்று உடைகளை அகற்றிவிட்டு கட்டிலில் படுத்துக் கொண்டார்.

உடனே ஒரு வைத்தியர் அவ்விடம் வந்து அப்பெண்ணின் உடலை விரல்களால் அழுத்தி சிறிது நேரம் பரிசோதித்து விட்டு தலையை ஆட்டியவாறு சென்றுவிட்டார். அடுத்து இன்னுமொருவர் வந்து அது போலவே அப்பெண்ணை பரிசோதித்துவிட்டு எதுவும் கூறாமல் அவ்விடம்விட்டு அகன்றார். மூன்றாவதாக மற்றொரு வைத்தியர் வந்து அவரும் ஏனையவர்களை போன்றே அப்பெண்ணை பரிசோதிக்க தொடங்கினார்.

வைத்திய நிபுணர் இன்னும் வராமல் உதவி வைத்தியர்களே தொடர்ந்து பரிசோதித்துக்கொண்டிருந்ததால் சினமடைந்த அப்பெண் இப்படியே மாறி மாறி பரிசோதித்துக்கொண்டிருந்தால், சிகிச்சையை எபபோதுதான் ஆரம்பிப்பீர்கள் என கோபமாக கேட்டாள். அதற்கு வந்தவர் அவசரமாக, அது எங்களுக்கு எப்படி தெரியும், அதை நீங்கள் வைத்தியர் ஐயாவிடம்தான் கேட்க வேண்டும். நாங்கள் இவ் அறைக்குள் பெயின்ற் அடிக்க வந்த வேலையாட்கள் என கூறியவாறு ஓடிவிட்டார்.

அங்கே, தான் விரல்களால் சுட்டிக்காட்டிய தனது அறையின் திசையை சரிவர அவதானிக்காமல் மறு பகுதியில் திருத்தவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த அறைக்குள் அப்பெண் நோயாளி நுழைந்ததை அறியாத வைத்திய நிபுணர் தனது அறைக்குள் நோயாளியை காணாது தேடிக்கொண்டிருந்தார்.

**ஹா! ஹா! ஹா!**

ஒரு பையனுக்கு ஒரு கையில ஆறு விரல் இருந்துச்சாம்! அவன் நண்பர்கள் எல்லாரும் அவன "சூர்யா சூர்யா" னு கூப்பிட்டாங்க !

ஏன் தெரியுமா? யோசிங்க ! என்ன தெரியலையா ?

ஏன்னா அவன் பேரு "சூர்யா" .....!!!!!




# ரோஜா போல் மிளிர ஆசையா!!

அழகுக்கு அழகு சேர்க்கும் ரோஜா பேஸ் பேக்கை எளிய முறையில் வீட்டிலே தயார் செய்யலாம்.

**தேனுடன் ரோஜா கலவை**

ரோஜா இதழ்களை நீரில் 1 மணி நேரம் ஊறவைத்து நன்றாக அரைத்து கொள்ளவும். இதில் தயிர், எலுமிச்சை சாறு, தேன் சேர்த்து பேஸ்ட் போல் கலந்து முகம், கழுத்தில் போட்டு 20 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் கழுவவும்.

**ஓட்சுடன் ரோஜா கலவை**

ரோஜா இதழ்களை சூடு தண்ணீரில் போட்டு 30 நிமிடம் வைக்கவும். பின்னர் ரோஜா இதழ்களை பிழிந்து தண்ணீரை தனியாக எடுக்கவும். முகத்தை நன்றாக கழுவி விட்டு அரைத்த ஓட்சுடன் ரோஜா தண்ணீரை சேர்த்து நன்றாக கலந்து முகம், கழுத்தில் தடவவும். 20 நிமிடம் கழித்து தண்ணீரால் முகத்தை கழுவ வேண்டும்.

**கடலை மாவுடன் ரோஜா கலவை**

ரோஜா இதழ்களை நன்றாக அரைத்து கொள்ளவும். அதில் கடலை மாவு, தயிர் சேர்த்து நன்றாக கலக்கவும். இந்த கலவையை முகத்தில் போட்டு நன்றாக காய விடவும். காய்ந்ததும் பால் அல்லது தண்ணீர் கொண்டு முகத்தை கழுவ வேண்டும்.

# சோயா கட்லட்

**தேவையான பொருட்கள்**

சோயாமாவு - 50 கிராம், எலுமிச்சை சாறு – ½ தே.க, மஞ்சள்பொடி – ¼ தே.க, உப்பு - தேவைக்கேற்ப, அரிசி மாவு - 2 தே.க, உருளைக்கிழங்கு – 2, வெங்காயம் - 1, காரட் - 1, இஞ்சி, பூண்டு - 1 தே.க, கரம் மசாலா – ½ தே.க, எண்ணெய் - 75 கிராம், கொத்துமல்லி - சிறிதளவு



**செய்முறை**

உருளை, கரட் இவற்றை வேக வைத்து மசித்துக் கொள்ளவும். எண்ணெயை தாச்சியில் விட்டு பொடிப்பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சைமிளகாய் இவற்றைப் போட்டு வதக்கி அதனுடன் உருளை, கரட், மஞ்சள், உப்பு, இஞ்சி, பூண்டு சேர்த்து வதக்கிய பின் பாதி சோயாமாவு, அரிசி மாவு சேர்த்துக் கலந்து திக்கானவுடன் இறக்கிக் கொள்ளவும். நன்றாக ஆறியபின் எலுமிச்சைசாறு சேர்த்து பின் மற்ற சோயா, அரிசி மாவை உப்பு கலந்து ரெடியாக தட்டில் வைத்துக் கொள்ளவும். கட்லெட் செய்ததை மாவில் போட்டு புரட்டி (உருட்டி) எடுத்து தோசை தட்டில் சிறிது எண்ணெயில் பொரித்து எடுக்க ருசியாக இருக்கும்.

# பிரட் குலாப்ஜாமூன்

**தேவையான பொருட்கள்**

பிரட் ஸ்லைஸ் - 5 அல்லது 6, பால் - 1 கப், சர்க்கரை - 1 கப், தண்ணீர் - 1 கப், வாசனைக்கு ஏலக்காய், பிடித்தமான எஸன்ஸ், குங்குமப்பூ



**செய்முறை**

பிரட்டின் ஓரங்களை கட் பண்ணி எடுத்து விட்டு, கைகளினால் நன்றாக பிரட்டை பொடித்து, கொஞ்சம் கொஞ்சமாகப் பாலை விட்டுப் பிசைய வேண்டும். கைகளினால் உருட்டும் பதம் வந்ததும் பாலை நிறுத்தி விடவும்.

நன்கு பிசைந்த பிரட்டை சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வைக்கவும். அடுப்பில் சர்க்கரை தண்ணீர் இரண்டையும் ஒன்றாகக் கலந்து, ஒரு பாத்திரத்தில் போட்டு சர்க்கரை கரையும் வரை கொதிக்க விடவும். பின்பு இறக்கி வைத்து ஏலப்பொடி, எஸன்ஸ், குங்குமப்பூ போட வேண்டும். தாச்சியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைத்து மிதமான சூட்டில் உருட்டி வைத்த பிரட் உருண்டைகளை எண்ணெயில் போட்டு பொன் நிறமாக பொறித்து உடனே சர்க்கரைப் பாகில் போட வேண்டும். சிறிது நேரம் ஊறிய பிறகு மிகவும் மிருதுவாக இருக்கும்.







மனிதர்களை வாட்டி வதைக்கும் உயிர்கொல்லி நோயாக மார்பகப் புற்றுநோய் விளங்குகின்றது. இந்நிலையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சி ஒன்றில் மார்பகப் புற்றுநோயை தவிர்ப்பதற்காக 5 வழிமுறைகளை பின்பற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


- சீரான கால இடைவெளிகளில் கண்ணாடிகளின் முன் நின்று மார்பகங்களில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்தல். இதன் மூலம் மாற்றங்கள் ஏற்படும்போது வைத்தியர்களை அணுகி தகுந்த ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளனர்.
- தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதன் மூலமும் மார்பகப் புற்றுநோயை தவிர்க்க முடியும் என குறிப்பிட்டுள்ள அவர்கள் இவ்வாறு பாலூட்டுவதன் மூலம் உடலின் சுற்றோட்டத்தொகுதி சீராக இயங்குகின்றது எனவும் தெரிவித்துள்ளனர்.



- மட்டுப்படுத்தப்பட்ட அல்கஹால் பாவனை
- மித மிஞ்சிய கொழுப்பு உணவுகளை தவிர்த்தல்.
- உடல் எடையினை கண்காணித்தல் என்பவற்றின் மூலமும் மார்பகப் புற்றுநோய் தாக்கத்திற்கு உள்ளாவதிலிருந்து பாதுகாப்பு பெற முடியும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சூரிய ஒளி – விற்றமின் டி

தற்போதைய காலகட்டத்தில் பெரும்பாலானோர் சூரிய ஒளிப்பட்டாலே உடல் கருத்துவிடும் என எண்ணி முக்காடு போடுகின்றனர். மனித உடலைக் கட்டமைக்கும் கம்பிகளாக விளங்கும் எலும்புகளின் வலிமைக்கு தேவையான வைட்டமின் டி 90 சதவீதம் சூரியஒளியில் உள்ளது. நாளொன்றுக்கு தேவைப்படும் வைட்டமின் டி ஐ, சூரிய ஒளியை நமக்குள் உள்வாங்குவதன் மூலம் பெற முடியும். இந்த வைட்டமின் டி குறைவதன் மூலம் எலும்பு வலுவிழந்து ஆஸ்டியோ பொரோசிஸ், ஆஸ்டியோமலாசியா போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. உடலில் ஏற்படும் புண்களை ஆற்றும் வல்லமையும் இதற்கு உண்டு. சூரியன் உதிக்கும் நேரத்திலோ, சூரியன் மறைவதற்கு முன்போ நடைப்பயிற்சி மேற்கொள்வது வைட்டமின் டியை பெற வசதியாக இருக்கும். இது தவிர கடல் உணவுகளில் சாலமன் மீன்களிலும், சோயா பனீர், காளான், முட்டையின் மஞ்சள் கரு, ஈரல், பால் மற்றும் மீன் எண்ணெய் மாத்திரைகளிலும் காணப்படுகின்றது.




**மேஷம்** : குடும்பத்தில் ஒற்றுமை பலம்பெறும். உடல்நலம் ஆரோக்கியமாகும்.

**ரிஷபம்** : குறித்த காலத்தில் பணி நிறைவேறும்.

**மிதுனம்** : உடன் பிறந்தவர்களின் எதிர்பார்ப்பை ஓரளவு பூர்த்தி செய்வீர்கள்.

**கடகம்** : இல்லறத்துணையின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் வருகையால் வளர்ச்சி பெறும்.

**சிம்மம்** : பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்க அனுகூலம் உண்டு.

**கன்னி** : சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும்.

**துலாம்** : வெளியூர் பயணம் பயன் கருதி மேற்கொள்வீர்கள். வீட்டிற்கு வரும் உறவினர்களை இயன்ற அளவில் உபசரிப்பீர்கள்.

**விருச்சிகம்** : தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறுகளை தாமதமின்றி சரி செய்ய வேண்டும்.

**தனுசு** : புத்திரரின் செயலை கண்டிப்பதில் நிதான அணுகுமுறையை பின்பற்றவும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும்.

**மகரம்** : நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்.

**கும்பம்** : அத்தியாவசிய செலவுக்காக கெடுபிடி குணம் உள்ளவரிடம் பணக்கடன் பெற வேண்டாம்.

**மீனம்** : அதிக விலையுள்ள பொருளை கவனமுடன் பாதுகாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Ricket fest 2014 முதலிடம்



ricket fest 2014 கிண்ணத்துக்கான மென்பந்து போட்டி 31.10.2014 அன்று கத்தார் டோகாவில் அல்சா என்னும் இடத்தில் நடைபெற்றது. பாடுமீன் விளையாட்டு அணியினர் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாடுமீன் அணி மற்றைய அயியினை தமது சிறந்த துடுப்பாட்டத்தினாலும் பந்து



வீச்சினாலும் படு தோல்வியுறச் செய்தது. கத்தார் பாடுமீன் அணி இவ் ஆண்டுக்கான வெற்றிக் கிண்ணத்தையும் ஒரு லட்சம் இலங்கை ரூபாவையும் தனதாக்கிக் கொண்டது.

## கிரிக்கட் சுற்றுப் போட்டி

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ணம் 2014 மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு வடக்கு பிரதேச செயலாளர் வெ.தவராஜா தலைமையில் இடம்பெற்றது.



12 அணிகள் பங்கு கொண்ட இப்போட்டியில் முதலாம் இடத்தினை மண்முனை வடக்கு பிரதேச செயலக அணியினர் பெற்றுக் கொண்டனர். இரண்டாம் இடத்தினை கச்சேரி அணியினரும், வெல்லாவெளி பிரதேச செயலக அணியினர் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.




## இலங்கைத் தொடரில் அன்ரசன் இல்லை



இலங்கையில் நடைபெறவுள்ள இங்கிலாந்து இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரிலிருந்து இங்கிலாந்து அணியின் முன்னணி பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சனுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. உலகக் கிண்ணத் தொடருக்கு அவர் பூரண உடற் தகுதியுடன் இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

## சச்சினின் சுயசரிதை வெளியீடு



சச்சின் தனது கிரிக்கெட் வாழ்க்கை பற்றி 'பிளேயிங் இட் மை வே' (எனது வழியில் விளையாடுகிறேன்) என்ற பெயரில் சுயசரிதை எழுதியுள்ளார். அவரது சுயசரிதை மும்பையில் வெளியிடப்பட்டது. இதில் இந்திய கிரிக்கெட்டின் முன்னணி வீரர்களான டிராவிட், கங்குலி, வி.வி.எஸ். லட்சுமணன், ரவி சாஸ்திரி, கவாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். அவ்விழாவில் சச்சினுக்கு தூக்கத்தில் நடக்கும் பழக்கம் உள்ளது என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

## போட்டியை பார்த்த பெண்ணுக்கு சிறை தண்டனை

ஈரான் தலைநகரில் கடந்த ஜூன் மாதம் ஈரான் மற்றும் இத்தாலி நாடுகளுக்கு இடையே ஆண்கள் கைப்பந்து போட்டி நடந்தது. இந்த போட்டியை நேரில் பார்த்து ரசிப்பதற்காக இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இருந்து Ghoncheh Ghavami, என்ற 25 வயது இளம்பெண் ஈரானுக்கு வந்திருந்தார்.



ஆண்கள் விளையாடும் போட்டியில் பெண்கள் கலந்துகொள்ளவோ அல்லது பார்க்கவோ கூடாது என்பது ஈரான் அரசின் சட்டம். இந்த சட்டத்தை மீறியதாக அவர், அதிரடியாக கைது செய்யப்பட்டார். அவருடன் இருந்த இங்கிலாந்து பெண் நிருபர்களும் கைது செய்யப்பட்டனர்.

மேலும் அவர் மீது வழக்கு பதிவு செய்த ஈரான் போலீஸார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அவர்களுக்கு ஒரு ஆண்டு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு கூறியுள்ளது.

## வெற்றி பெறாவிட்டாலும் மகிழ்ச்சியான ஆண்டு நிறைவு

உலக டெனிஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வெல்ல தவறினாலும் இந்த ஆண்டை நிறைவுடன் முடித்த திருப்தியில் ஷரபோவா உள்ளார். ரஷ்ய டெனிஸ் நட்சத்திரம் மரியா ஷரபோவா (வயது 27) தரவரிசையில் 2 ஆவது இடத்திலுள்ளார். அவுஸ்திரேலியா (2008), பிரெஞ்ச் (2012), விம்பிள்டன் (2004), யு.எஸ்.ஓப்பன் (2006) என அனைத்து கிராண்ட் ஸ்லாம் பட்டங்களையும் வென்றுள்ளார்.

## சர்வதேசச் செய்திகள்

- **கரோலினா மாகாண கவர்னர் பதவிக்கு இந்திய பெண்**

அமெரிக்காவில் செனட் சபையின் இடைத்தேர்தல் மற்றும் மாகாண கவர்னர் தேர்தல் ஆகிய தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது. இந்த தேர்தலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த நிக்கி ஹாலே என்ற பெண், கரோலினா மாகாண கவர்னர் பதவிக்கு போட்டியிட்டு மாபெரும் வெற்றியை பெற்றுள்ளார்.

- **தவறுதலாக இந்திய எல்லைக்குள் காலடி வைத்தாராம்**

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் எல்லைப்பகுதியான வாகா எல்லைப் பகுதிக்கு நேற்று வந்த பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் கவனக்குறைவாக இந்திய எல்லைக்குள் காலடி எடுத்து வைத்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

- **தவறுதலாக இந்திய எல்லைக்குள் காலடி வைத்தாராம்**

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் எல்லைப்பகுதியான வாகா எல்லைப் பகுதிக்கு நேற்று வந்த பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் கவனக்குறைவாக இந்திய எல்லைக்குள் காலடி எடுத்து வைத்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

- **பரிதாபமாக இரட்டையர் இறப்பு**



பிரித்தானியாவில் உள்ள பிளேக் ஹவுஸ் பகுதியில் ஜோஸ்லின் (27) எனும் நிறைமாத கர்ப்பிணியான அவருக்கு திடீரென கடும் வயிற்றுவலி ஏற்பட்டதால், மருத்துவ உதவிக்காக அவசர ஊர்தியை அழைத்துள்ளார். சுமார் 12 நிமிடங்கள் கழித்து அவரது வீட்டிற்கு விரைந்த மருத்துவ உதவியாளர்களால் அவர்களது வீட்டினுள் நுழைய முடியாமல் போனது, எனவே பொலிசாரின் உதவியை நாடியுள்ளனர்.

இதனையடுத்து அவரது வீட்டிற்கு சென்ற பொலிசார், மருத்துவ உதவியாளர்களுக்கு உதவியதையடுத்து, தரையில் விழுந்த கிடந்த ஜோஸ்லினை உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

ஆனால் கருவில் இருந்த குழந்தைகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு, உள் உறுப்புகள் பாதிப்படைந்ததால், மருத்துவர்கள் செய்த அறுவை சிகிச்சையில் இரண்டு பெண் குழந்தைகளும் பரிதாபமாய் உயிரிழந்துள்ளது. மேலும் குழந்தைகளின் தாய் ஜோஸ்லினும் கோமாவில் உயிருக்கு போராடி வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

- **சிறுமிகளை விற்பனை செய்த ஐ.எஸ்.ஐ.எஸ்**

ஈராக்கில் உள்ள சின்சார் என்ற மலைப்பகுதியில் வாழும் சிறுபான்மை இன மக்கள் யாஷிடி மக்கள். சமீபத்தில் இவர்கள் இருக்கும் பகுதிக்கு சென்ற ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் யாஷிடி இன மக்களை முஸ்லீம் இனத்திற்கு மாறும்படி வற்புறுத்தினர். மறுத்த யாஷிடி இன மக்களை கொலை செய்துவிட்டு அங்கிருந்த திருமணம் ஆகாத சிறுமிகள் மற்றும் இளம்பெண்களை கடத்தி சென்றனர்.

கடத்தி சென்ற அப்பாவி சிறுமிகள் சிலரை திருமணம் செய்துகொண்ட தீவிரவாதிகள் ஒருசில சிறுமிகளை பேரம் பேசி விற்பனை செய்துள்ளனர்.

- **புகைப்படம் எடுத்ததால் வேலை நீக்கம்**

ஒபாமாவை Kenneth Tate லிப்ட்டில் அழைத்து சென்றபோது அவர் பையில் துப்பாக்கி வைத்திருந்ததாகவும், அதன்பின்னர் அவர் ஒபாமாவின் காரை தன்னுடைய செல்போனில் புகைப்படம் எடுத்ததாகவும் குற்றம் சாட்டிய ஒபாமாவின் செக்யூரிட்டி அதிகாரிகள் அவரை பணியில் இருந்து டிஸ்மிஸ் செய்ய உத்தரவிட்டனர்.



- **பின்லேடனை சுட்ட நபர் வெளி வந்தார்**

அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை கொன்ற நபர், முதன்முறையாக வெளி உலகத்துக்கு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளார். கடந்த 2011ம் ஆண்டில் பாகிஸ்தானின் அபோதாபாத்தில் உள்ள ரகசிய வீட்டில் பதுங்கி வாழ்ந்து வந்த பின்லேடனை அமெரிக்க ராணுவத்தினர் வீடு புகுந்து தாக்குதல் நடத்தி சுட்டுக் கொன்றனர். பின்லேடனை மிக அருகில் பார்த்த ராப், அவரின் தலையில் 3 முறை சுட்டது தெரியவந்துள்ளது.

- **மாற்றுத்திறனாளியை கற்பழித்த நபர்**

பிரித்தானியாவை சேர்ந்த ஆண்ட்ரூ (40)என்ற நபர், 13 வயது மாற்றுத்திறனாளி சிறுமி ஒருவரை தனது எஸ்டேட்டில் வைத்து கற்பழித்ததுடன், அந்த வீடியோவையும் தனது கைப்பேசியில் பதிவு செய்துள்ளார். இந்நிலையில் கனடாவில் வைத்து ஆண்ட்ரூவை கைது செய்து, அவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியுள்ளனர்.

- **கனடாவும் நிதியுதவி**

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவ தொடங்கிய இந்த எபோலா நோய் தற்போது உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவி விஸ்வரூபம் எடுத்துள்ளது. இந்த நோயை கட்டுப்படுத்தவும், எபோலா வைரஸ் நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும், World Health Organization என்ற அமைப்பு நிதிதிரட்டி வருகிறது. இதற்கு கனடிய அரசும், 30.5 மில்லியன் டொலர்களை வழங்கி யுள்ளதாக கனடாவின் சுகாதார அமைச்சர் உறுதிபடுத்தியுள்ளார்.

- **முதுமைக் காதலும் திருமணமும்**

இங்கிலாந்து நாட்டில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் இருந்து வரும் Mrs Plotnikova என்ற 100 வயது பெண்மணி தனது முதுமை காரணமாக வீல்சேரின் உதவியால்தான் நடமாடிகொண்டு வந்தார். ஆனாலும் அவருக்கு அதே முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த 60 வயது Afanasii Harin என்பவர் மீது ஈர்ப்பு ஏற்பட்டது. Afanasii Harin கண்பார்வை இல்லாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.



கடந்த 11 ஆண்டுகளாக முதியோர் இல்லத்தில் ஒன்றாக வாழ்ந்து வந்த இந்த ஜோடி ஒருவருக்கொருவர் நன்கு புரிந்துகொண்டதால் திருமணம் செய்ய முடிவு செய்தனர். இதற்கு அந்த முதியோர் இல்லமும் அனுமதி கொடுத்ததால் இவர்களது திருமணம் எளியமுறையில் அதே இல்லத்தில் நடைபெற்றது.

- **குர் ஆனை எரித்ததாக குற்றம் சாட்டி உயிருடன் தம்பதியினர் எரிப்பு**

பாகிஸ்தானின் சக்(Sak) என்ற கிராமத்தில், சஹ்ஜாத் மசி-ஷமா என்ற கிறிஸ்துவ தம்பதியினர் கூலித் தொழிலாளிகளாக பணியாற்றி வந்துள்ளனர். இவரது உரிமையாளர் முஹம்மத் யூசுப் குஜ்ஜார் என்பவர் இந்த தம்பதியருக்கு ஒழுங்காக கூலியை தராமல் இழுத்தடித்து வந்துள்ளார்.

இதனால் சஹ்ஜாத்திற்கு அவரது உரிமையாளர் முஹம்மத்துடன் வாக்கு வாதம் நேர்ந்ததுடன், அத்தம்பதியினர் இஸ்லாமிய புனித நூலான குர்ஆனை தீயீட்டு கொளுத்தியதாக கூறப்படுகிறது. இதை அறிந்து கொந்தளித்த ஏராளமானவர்கள் உள்ளூர் மதத் தலைவரின் தலைமையில் முஹம்மத் யூசுப் குஜ்ஜாரின் செங்கல் சூளைக்கு சென்று அந்த தம்பதியினரை குடிசையை விட்டு வெளியே இழுத்து, அடித்து சித்ரவதை செய்ததுடன் கொழுந்து விட்டு எரிந்த செங்கல் சூளை தீக்குள் உயிருடன் அத்தம்பதியினரை வீசியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கின் உதயத்தில் புறக்கணிக்கப்பட்ட தமிழர்

## யோகேஸ்வரன் நா.உ. குற்றச்சாட்டு

கிழக்கின் உதயம் மூலம் கிழக்கு மாகாணத்திற்கு பொருளாதார அமைச்சு நிதியத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 250 மில்லியன் ரூபாய்களில் தமிழர் கிராமங்களுக்கு என 7.15 மில்லியன் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழத் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் கிழக்கின் அபிவிருத்திப் பணிகளில் தமிழர் கிராமங்கள் புறக்கணிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கிழக்கின் உதயம் மூலம் 2014ம் ஆண்டு பொருளாதார அமைச்சுக்கு 250 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முஸ்லிம் கிராமங்களுக்கு மொத்தம் 224.25 மில்லியனும், தமிழ் மக்களின் கிராமங்களுக்கு 7.15 மில்லியனும் ஒதுக்கியுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. இதன் படி காத்தான்குடி 159 மில்லியன், ஓட்டமாவடி 30.6 மில்லியன், ஏறாவூர் நகரத்திற்கு 9.8 மில்லியன், கோறளைப்பற்று மேற்கு 4.5 மில்லியன், ஆரையம்பதிக்கு 20.35 மில்லியன், செங்கலடிக்கு 2.6 மில்லியன், மண்முனை வடக்கு 17.2 மில்லியன், க஌வாஞ்சிக்குடிக்கு 1.55

13

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் திருகோணமலைக்கு திடீர் வருகை



திருகோணமலை கல்வி வலயத்தின் நகர்ப்புறத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன், நிர்வாகச் செயலாளர் கே.நல்லதம்பி, மாவட்டச் செயலாளர் பா. தேவராஜா, இந்துக்கல்லூரி இணைப்பாளர் பொன்.சுதாகரன், சென்மேரிஸ் கல்லூரி இணைப்பாளர் ப.சுந்தரராஜன் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் விஜயம் செய்து பாடசாலைகளில் உள்ள குறைகளை அவதானித்து அறிந்ததோடு, ஆசிரியர்களுக்கு உள்ள பிரச்சனை களையும், குறைகளையும் கேட்டறிந்தனர். திருகோணமலை கல்வி வலய ரீதியிலான குறைபாடுகளை உடனடியாகவே வலயக் கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரனைச் சந்தித்து எடுத்துரைத்து உரிய ஆசிரியர்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் நிர்வாகம் சார்ந்த


13

# கிழக்கு மாகாண விருதுகள்

கிழக்கு மாகாணத்தில் 2014ஆம் ஆண்டிற்கான விருதுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் விபரங்களை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது. வித்தகர் விருதுக்குத் தெரிவானோர் முறையே ஜனாப்.கச்சி முகம்மது முகம்மது இக்பால் -கிண்ணியா-07- ஆக்க இலக்கியம், திரு.சின்னத்துரை சுந்தரலிங்கம்- திருகோணமலை - ஆக்க இலக்கியம், ஜனாப். பிச்சைத்தம்பி அஸிஸ்- கிண்ணியா-07- இலக்கியம், திரு.சூசைப்பிள்ளை எட்வேட்- திருகோண மலை - ஆக்க இலக்கியம், திரு.அழகையா இருதயநாதன்- மட்டகளப்பு- நாடகம், திருமதி.கத்தறின்- வயலற் சந்திரசேகரம்- மட்டகளப்பு - ஆக்க இலக்கியம், ஜனாப். அகம்மது லெவ்வை வெள்ளைத்தம்பி- ஆரையம்பதி - கோலாட்டம், திரு.சதாசிவம்- மகாலிங்கம்- கிரான்- இலக்கியம், ஜனாப்.அகம்மது லெவ்வை குருஷித்தாஸிம்- கல்முனை- இலக்கியம் சமுகசேவை ஜனாப்.முகம்மது- லெவ்வை முகம்மது பாறுக்- பாலமுனை - கவிதை, திரு.முருகேசு-

13

# அஞ்சலி



## அமரர் கணபதிப்பிள்ளை சிவபாக்கியம்

மரைமுரசின் வளர்ச்சிக்காக அரும் பணியாற்றிவரும் சேனையூர் மத்திய கல்லூரியின் முதல்வர் ஐயா இரா.இரத்தினசிங்கம் அவர்களின் மாமனாரின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது துணைவியாருக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!!!

மலைமுரசு

# திருகோணமலையில் இருந்து அனர்த்த உதவிகள்



இந்துக் கல்லூரியின் உதவிகள் பிரதேசச் செயலக அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டது



இந்துக்கல்லூரி மாணவர்கள் பிரதேசச் செயலக ஊழியர்கள் பணியில்



ஐ.ஓ.சி எண்ணை நிறுவனம் வழங்கிய ரூபா 300,000 காசோலையை பிரதேசச் செயலாளர் பெற்றுக்கொள்கின்றார்



திருகோணமலை நகரசபையின் வேலைத்தள மற்றும் சுகாதார நலன்புரிச்சங்கம் வழங்கிய ரூபா 100,000.00 நகர சபை முதல்வரிடம் கையளிக்கப்பட்டது





மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருட்களை சல்லிக் கிராமத்தில் சேகரித்து வழங்கும் செயற்பாட்டை சல்லி கிராம மகளிர் அபிவிருத்தி சங்கம் கடந்த 02.11.14 (ஞாயிறு) மேற்கொண்டது. செய்திகளும் படங்களும் (கலாஹரன், நிக்கி, கதிரவன், அச்சுதன்)

# கிழக்கில் முதலிடம்



உப்புவெளி நூலக அலுவலர்களுடன் பட்டணமும் சூழலும் பிரதேசசபைத் தலைவர்

வாசிப்பு மாதத்தையொட்டிய பல்வேறு தேசிய விருதுகளை உப்புவெளி நூலகம் தனதாக்கிக் கொண்டுள்ளது.

தொடர்ந்து 10 வருடகாலத்திற்கு தேசிய வாசிப்பு மாத நிகழ்வினை சிறப்பாக நடத்திய பிரதேசசபை விருது, 2013ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தை சிறப்பாக கொண்டாடியமை மற்றும் 2014ம் ஆண்டிற்கான வாசிப்பு மாதத்தை திட்டத்தை சிறப்பாக அனுப்பியமை ஆகிய விருதுகளையும் கிழக்கு மாகாணத்தில் முதலிடத்திற்கான விருதினையும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசபையின் உப்புவெளி பொது நூலகம் பெற்றுள்ளது. பரிசில்களுடன் பட்டினமும் சூழலும் பிரதேசசபையின் தலைவர் ஆர்.விஜேந்திரன் செயலாளர் மாலினி அசோக்குமார் நூலகர் திருமதி.கே.ராஜேஸ்வரசிங்கம் ஆகியோருடன் நூலகப் பணியாளர்களையும் படங்களில் காணலாம். (அச்சுதன்)

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, உட்துறை வீதி, திருகோணமலையில் இருந்து 06.11.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கைபடக்குத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org